
WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்

# AKARAM
# அகரம்

14.12.2017 - 13.01.2018

சுவடி: 6.08 திருவள்ளுவர் ஆண்டு 2048 ISSN 2195-6480




## மறக்கப்பட்ட முன்னோடிகளின் வரிசையில்

# கோபு

FREE CIRCULATION:

GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


TKS
BEST FOODS
23rd Dec
MEGA
Sale
All in ONE day Sale
X-Mas Sale
வாடிக்கையாளர் நண்பர்களுக்கு!
நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துகள்!
Coustomers, Friends!
Happy Christmas & New Year!
Frohe Weihnachten & einen guten Rutsch!
2018
+49 231 950 468 83 | +49 231 950 468 82
+49 151 253 004 00
info@tks-bestfoods.de | www.tks-bestfoods.de
tksbestfoods | Rheinische Str. 79, 44137 Dortmund

புதிய வரவு

ஐரோப்பாவிற்க்கான புதிய சேவை

ortel MOBILE







# 19,99€[15) /4 Wochen

## ஒரே SIMல் இருந்து...

## 300 நிமிடங்கள் ஒரு மாதத்திற்கு பேசலாம்.

## 3GB இன்ரர்னெற்றும் பாவிக்கலாம்.

ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே 300 நிமிடங்கள் முடிந்தாலும்,

அதன் பிறகு 9 சென்ற் நிமிடத்திற்கு கணக்கிடப்படும்.

3GB முடிந்தால், மீண்டும் 9 யூரோவிற்கு பெறலாம்.

**19.99 யூரோவுக்கு ஐரோப்பாவின் எந்த நாட்டிலும் இருந்தபடி ஐரோப்பா முழுவதும்**




- 300 Minuten in Deutschland & in 50 weitere Länder
- Internet Flat 3 GB
- Surfen&Telefonieren in der EU
- On-Net Flat (deutschlandweite Nutzung)

www.ortelmobile.de

Ortel. In über 220 Länder sprechen. Powered by e·plus+

அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine

13. மார்கழி 2017 - 14. தை 2017
சுவடு / Issue: 6.08

தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)

தொடர்புகளுக்கு:
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 95 66 10
Email: ***editor@akaram.eu***

ISSN 2195-6480

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதார வள்ளல் பெரு மக்களுக்கும் வணக்கம்,

ஆங்கில ஆண்டின் இறுதி மாதத்தில் பிறக்கப் போகும் புதிய ஆண்டை வரவேற்கத் தயாராகி வருகிறோம். இதே மாதத்தில்தான் இறைமகன் இயேசு அவதரித்த விழாவான நத்தார் புது வருடக் கொண்டாட்டங்கள் மக்களிடத்தே மகிழச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடச் செய்யும்;.

அது போலவே தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையும் எமக்காக வரக் காத்திருக்கிறது. எனவே அனைத்து இன மத மக்களின் மகிழ்வோடும் உணர்வுகளோடும் அகரம் பங்கு கொள்கிறது.

அதே நேரத்தில் உலகப் பெரு நிறுவனங்களின் வணிகச் சந்தையும் அரசுகளின் அரசியலும் கிறிஸ்தவ மத அமைப்புகளின் நலன்களும் இவை அனைத்திலும் உள்ளன என்பதையும் மறுக்க முடியாது. இவர்கள்தான் உலகில் போர்களையும் சமாதானத்தையும் சமமாக இலாப நட்டக் கணக்கோடு நடத்தி இலாபம் அடைபவர்களாக உள்ளனர். இவர்களுக்கு இலாபம் என்றால் யாருக்கோ அது நட்டமாக இழப்பாக இருக்க வேண்டுமே? நட்டம் யாருக்கு எனப் பார்த்தால் அது அப்பாவிகளான உலக மக்களுக்கே!

மாவிலாறு முதல் முள்ளி வாய்க்கால் வரை ஆயுத மழை கொண்டு தமிழினப் படுகொலையை நடத்திய அதே கொலைகாரர்கள்தான் இன்று நல்லாட்சி என்ற போதி மரத்துப் புத்தர்களாக நல் உபதேசம் செய்கிறார்கள். ஆனால் கொலைக் களத்தில் தப்பியவர்களை முதலில் முட்கம்பி வேலிச் சிறையிலும் பின்னர் நல்லாட்சி இராணுவ சிறையிலும் வைத்து மயான அமைதியை அவர்களே நிலை நாட்டு கிறார்கள்.

அன்று இந்தியாவின் வெளித் திண்ணையில் இருந்து தமிழ் இனப் படு கொலையை வேடிக்கை பார்த்த அதே கண்கள்தான் இன்று நல்லாட்சியின் காட்சிகளைச் சிலாகித்து ஜனநாயக விழுமியங்கள் பற்றி இலங்கைப் பாராளு மன்றத்திலே புரியாத மொழியில் புரிந்து கொள்ள மறுக்கும் மாக்களிடம் தமது மேதாவித்தனமான பேச்சுகளால் எரியும் நெருப்பிலே எண்ணை ஊற்றி அணைக்கிறார்கள்.

கோட்டுகள் சூட்டுகள் பட்டுப் பீதாம்பரங்களுடன் சொகுசுக் கார்களில் பவனி வந்தாலும் நிஜத்தில் அரைக்குக் கீழே கோவணமும் இல்லாத கோமான்களாக வாக்களித்த மக்களால் பார்க்கப் படுகிறோம் என்று அறியாத அறிஞர்களாக முட்டாள்களின் சொர்க்கத்தில் அவர்கள் வாழ்கிறார்கள்.

வாக்களித்த மக்களுக்கு வெள்ளை வானும் இராணுவ காவலும் நாலாம் மாடி வரவேற்பும் என்ற வாழ்வு நிலை இருக்கும் பொழுது உலகமே அதுதான் அமைதியும் சமாதானமும் இன நல்லிணக்கமும் எனத் திரும்பத் திரும்பக் கூறி கோயபல்ஸ் உண்மைகளை நினைவு படுத்து கிறது.

அப்படித்தான் ஈழம் தமிழ் மக்கள் தமது இலாப நட்டக் கணக்கை

மக்கள் நவம்பர் 27ல் உலகம் எங்கும் சரி பார்த்தார்கள். குறிப்பாக தமிழ் ஈழத்தில் ஒரு மக்கள் புரட்சியாகவே மக்கள் நடத்திக் காட்டி விட்டார்கள். இந்த ஆண்டு தமிழகத்தில் எமது மாவீரர்கள் நாளைப் பெரும் அளவில் நாம் தமிழர் கட்சி நடாத்தியிருந்துது ஒரு சிறப்பு எனலாம்.

ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் சும்மா விடப் போவதில்லை என்பதை இலங்கையில் சிங்களத் தேசியமும் இந்தியாவில் இந்தித் தேசியமும் மீண்டும் ஒரு இரத்த வெள்ளத்தை பார்க்கத் துடிப்பது தெரிகிறது. அல்லது அப்படி ஆகும் எனக் கூறி மிரட்டலும் கொடுக்கின்றனர்.

அவர்களே நத்தார் புத்தாண்டு தைப் பொங்கல் வாழ்த்துகளை அள்ளி வழங்கி இதுதான் அற்புதமான உலகம் என்றோ அல்லது பிறக்கப் போகும் புத்தாண்டு புதுமைகள் செய்யும் ஆண்டாக மலரும் என ஆரூடம் பேசி எரிகின்ற மனங்கசை குளிர வைப்பார்கள்.

ஈழத் தமிழ் மக்கள் பயத்தை ஒழித்து புதுவாழ்வு பெற பிறக்கின்ற புத்தாண்டில் புலம் பெயர் தமிழர் நாம் என்ன செய்யப் போகிறோம்? ஒருவரோடு ஒருவர் முட்டி மோதும் கட்சி அரசியல் செய்து மொத்த தமிழ் இனத்தையும் வரலாற்றில் இருந்து அழிக்கப்படுவதற்கு துணை செய்வோமா அல்லது ஒன்றாக இணைந்து ஒரே தீர்வை நோக்கிச் செயற்பட்டு தமிழ் இனத்தை அழிந்து விடாமல் காப்பாற்றப் போகிறோமா?

வடமாகாண சபை முதலமைச்சரே கூறிவிட்டார் சிங்களம் எதையுமே தராது சர்வ தேச சட்டங்களின் உதவியுடன்தான் போராடிப் வெற்றி பெற வேண்டும் என்று ! அகரமும் அவரது பேச்சை அப்படியே வரவேற்று அவரையும் பாராட்டுகிறது.

தந்தை செல்வா சொன்னது போல தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என நாம் சொல்ல முடியாது சொல்லவும் கூடாது. புலத்தில் உள்ள நாம்தான் ஈழத் தமிழ் மக்களின் கடவுள் போல் இருக்கிறோம் இருக்கவும் வேண்டும். நாம் அவர்களுக்கும் எமது வருங்காலச் சந்ததிக்கும் கொடுக்கப் போவது வரமா? சாபமா? உறவுகளே சிந்தியுங்கள்!

நல்வாழ்த்துகளுடன் விடைபெறும்,
அகரம் குழுமம்.





த.எதிர்மன்னசிங்கம்

# ஐ.நா. தீர்வு என்ன?
## காதல் தேசம் கற்ற லோனியாவும் தமிழ் ஈழமும்!

கற்றலோனியா விடுதலை ஆதரவாளர்கள் தலைவரைத் தனிநாடு சுதந்திரப் பிரகடனம் செய்ய கோரிக்கை விடுக்கும் காட்சி

ஸ்பெயின் என நாம் அறிந்த ஸ்பானியா தேசத்தின் ஒரு பகுதிதான் கற்ற லோனியா. அங்கேதான் அமரக் காதலர்களான றோமியோ ஜூலியட் வாழ்ந்து மடிந்ததாக பிரபல ஆங்கில எழுத்தாளர் வில்லியம் சேக்ஸ்பியர் தமது றோமியோ அன்ட் ஜூலியட் என்ற அழியாப் புகழ் பெற்ற துன்பியல் நாடகத்தை வடித்திருந்தார். சில வருடங்களுக்கு முன்னர்தான் அகழாய்வுகள் மூலம் இந்த அமரக் காதலர்களின் எலும்புக் கூடுகள் இரண்டு ஒன்றை ஒன்று அணைத்திருந்த நிலையில் வெளியாகி இருந்தன.

அந்தப் பகுதி உள்ள பிரதேசம் ஸ்பானிய தேசத்தின் கூட்டாட்சியில் இன்றுள்ளது. அவர்களுக்கு பூரணமான அரசியல் உரிமைகளும் கௌரவமும் வழங்கப் பட்டுள்ளன. இருந்தாலும் கூட சுதந்திர வேட்கை பெற்ற மனிதருக்கு தங்கத்தால் ஆன கூண்டு வாழ்க்கை என்றாலும் அதுவும் சிறைதான். அத்தகைய மான உணர்வு மேலோங்கி விட்டால் அதனை உடைத்து வெளியேறிச் சுதந்திரக் காற்றை அனுபவிக்கும் வேட்கையை யாராலும் என்றைக்குமே அடக்கி விட முடியாது. அதனால்தான் கற்றலோனியாவும் தமிழ் ஈழமும் உலக அரங்கில் விடுதலைத் தீயில் பிரகாசித்து நிற்கின்றன.

கற்றலோனியா இபேரிய அரசினால் 14ம் நூற்றாண்டில் அரகோன் அரசின் ஒரு பிரதேசமாக இருந்தது. 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இன்று ஸ்பானியா அரசு எனப்படும் கஸ்ரில் அரசுடன் அரகோன் இணைக்கப் பட்டது. அன்று முதல் கற்றலோனியரின் சட்டங்கள் பண்பாடுகள் உட்பட இன்றைய ஸ்பானிய அரசுடன் சேர்ந்தே கற்றலோனியா பாதுகாத்து வருகிறது.

30 வருட பிரெஞ்சு ஸ்பானியப் போரின் போது கற்ற லோனியர்கள் ஸ்பானியருக்கு எதிராகப் புரட்சி செய்தனர். மீண்டும் 1940 முதல் 1952 வரை மன்னராட்சிக்கு எதிராகப் போராடி தோல்வியில் துவண்டனர். ஆயினும் அவர்கள் தமது சட்டங்கள் சம்பிரதாயங்களைப் பாது காத்தே வந்தனர். ஸ்பானிய முடிக்கான உரிமைப் போரிலிருந்து பிரித்தானியப் படைகள் விலகியதும் 1913ல் பிரெஞ்சு ஸ்பானிய படை விரைந்து கற்றலோனிய நாட்டைக் கைப்பற்றியது.

14 மாத கால முற்றுகையின் பின்னர் 1914 செப். 11ந் திகதி பார்சிலோனா சரண் அடைந்தது. அத்துடன் அதன் சட்டங்கள் சம்பிரதாயங்களை ஸ்பானிய மத்திய ஆட்சியின் புதிய சட்டங்களால் ஆக்கிரமிக்கப் பட்டு அது சரண் அடைந்த செப். 11ந்திகதியே 1886 முதல் கற்ற லோனியாவின் தேசிய நாளாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. இதுவும் கற்றலோனிய மக்களின் தன்மான உணர்வுகளுக்கு சவாலாக அமைந்த விடயம். தமிழ் ஈழ மக்களை சிங்களத்தின் தேசிய கீதத்தை சிங்களத்திலேயே பாட வைத்தது போன்ற அவமானம்!

கற்ற லோனியாவின் பிரிவனைக் கோரிக்கை 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே எழுப்பப் பட்டு வருகிறது.

கற்றலான் மொழி கலாச்சார விழுமியங்களை மீட்டெடுக்கும் நோக்கமாக எழுந்த இயக்கம் கற்றலோனிய தேசியமாகவும் சுதந்தர வேட்கையாகவும் மாற்றம் பெற்றது.

1850 முதல் 1910 வரையான காலப் பகுதியில் சில தனி நபர்கள் ,அமைப்புகள் , அரசியல் கட்சிகள் ஸ்பெயினிடம் இருந்து கற்றலோனியா முழுமையாக விடுதலை பெற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து வந்துள்ளன.

2011 தொடக்கம் 2017 வரை வரிசையாக 20 தடவைகளுக்கும் மேலாக மக்கள் கருத்தெடுப்புகளை அமைப்புகளும் ஊடகங்களும் நடத்தி வந்துள்ளன. அதில் 2017 ஒக்டோபர் 1ந் திகதி நடந்த வாக்கெடுப்பை ஸ்பானிய மத்திய அரசு காவல் துறையை அனுப்பி மாநிலத்தில் பல கொடூரமான அடக்கு முறைகளை நடத்தியும் அதனை முற்றாகத் தடுக்க முடியவில்லை. வாக்குச் சீட்டுகள் பறித்து அழிக்கப் பட்டன. காப்பாற்றப் பட்ட வாக்குச் சீட்டுகளின் அடிப்படையில் வாக்களித்த மக்களில் 90 சத வீதமான வாக்காளர்கள் முழுமையான சுதந்திரத்தை கோரியிருந்தார்கள். இது தமிழ் ஈழ மக்களின் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் வழங்கிய மக்களாணைக்கு இணையானது.

இந்த வாக்கெடுப்பை மத்திய அரசு அனுமதிக்காத அங்கீகரிக்காத நிலையிலும் அது ஏற்படுத்தி உள்ள பிராந்திய சர்வ தேச அரசியல் அதிர்வுகள் கற்ற லோனியாவின் தனி நாட்டுக் கனவு நனவாகும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்பதைக் காட்டுகிறது.

2017 ஒக்டோபர் 27ந்திகதி கற்றலோனிய பிராந்திய பாராளு மன்றம் நடத்திய இரகசிய வாக்கெடுப்பில் 70க்கு 10 என்ற முடிவு பதிவாகி உள்ளது. இந்தப் 10ம் மத்திய அரசின் பிரதிநிதிகள் சமூகமளிக்க வில்லை மற்றும் ஸ்பானிய அரசின் அரசமைப்பு நீதிமன்றம் வழங்கிய தடைக்கு எதிராக செயற்பட முடியாது என்ற காரணங்களால் வாக்களிக்க வில்லை எனத் தெரிவித்துள்ளார்கள்.

இந்த வாக்கெடுப்பை ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் மற்றும் பெரும்பாலான அரசுகள் கற்றலோனியா ஸ்பெயினுடன் சேர்ந்தே இருக்க வேண்டும் எனத் தெரிவித்து வருகின்றன. நாங்கள் இதனை ஆதரித்தால் பிரிப்பது ஆகிவிடும் மற்றவர்களும் அதைச் செய்வார்கள் அது எமது வேலையுமல்ல, என்கிறார் ஐரோப்பிய ஒன்றிய தலைவர். ஆனால் இதனை முடிவு செய்ய வேண்டியவர்கள் கற்றலோனிய மக்களே என்பதை இவர்கள் நினைக்கத் தவறுவதையே அவர்களின் கருத்துகள் வெளிப்படுத்து கின்றன.

ஆனால் ஸ்கொத்லாந்தின் டப்ளின் நகரசபை கற்ற லோனிய விடுதலையை ஆதரித்து வெகு விரைவில் கற்றலோனியக் கொடியை நகரசபையில் பறக்க வைப்போம் என்கிறார் சபை உறுப்பினர் ஒருவர். அதற்கான சபை வாக்கெடுப்பை டிசம்பர் மாதக் கூட்டத்தில் நடத்தப் படும் என்கின்றனர். எப்படியோ கற்றலோனிய மக்களின் பிடிவாதமும் கடந்த கால வரலாறும் தமிழ் ஈழத்தின் கதையைப் போன்றே உள்ளதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.




கற்ற லோனாவின் வரலாற்றோடு ஈழத் தமிழர் வரலவாற்றையும் பார்க்கும் பொழுது மிகப் பாரிய ஒற்றுமையைக் காண முடியும்.

இலங்கை மீது நடத்தப்பட்ட முதல் படையெடுப்பாக இராமாயணப் போர் சிங்கள தமிழ் இலக்கியங்களில் நன்கு பதிவு செய்யப் பட்ட போராக காணப்படுகிறது. எனவே அதனை முற்றிலும் ஒரு கற்பனை இலக்கியமாகப் புறந்தள்ளிவிடுவது சரியாக இருக்காது. அந்தப் போர் இடம் பெற்ற காலத்தில் இலங்கை முழுவதும் தமிழ் மக்களின் தமிழ் அரசன் இராவணனின் தேசமாக இருந்துள்ளது. இராமாயணப் போரை இராவணனின் தம்பி விபீடணனின் காட்டிக் கொடுப்பு இல்லாமல் இராமன் வெற்றி பெற்றிருக்க முடியாது. அந்தப் போரின் முடிவில் இலங்கை மன்னன் இராவணனின் வானூர்தியான புட்பக விமானத்தை இராமன் தன்னோடு எடுத்துச் சென்றான் என்ற தகவலும் இராமாயண காதையில் பதிவாகி உள்ளது.

இராமாயணக் கதையை உறுதிப் படுத்தும் ஆதாரங்களை பல சிங்கள இலக்கியங்களும் கள வரலாற்று ஆதாரங்களையும் சிங்கள ஊடகங்கள் காணொளிப் பதிவுகளாக இணையத்தில் அன்றாடம் வெளியிட்டும் வருகின்றனர். எனவே அவற்றின் மூலம் இலங்கை தமிழரின் தேசமே என்பதை பின்னாளில் இலங்கை வந்து குடியேறிய வட இந்தியாவில் இருந்து நாடு கடத்தப் பட்ட விஜயனும் அவனது தோழர்களும் வரும் வரை இருந்துள்ளதை சிங்களத்தின் பௌத்த மத வரலாறு கூறும் மகாவம்வம்சமே குறிப்பிடுகிறது.

உலகமே இந்த மகாவம்சத்தை வரலாற்று பதிவாக ஏற்றுக் கொண்டுள்ளதால் அதனைத் தமிழர் நாம் ஏன் எமது

தாயக தேசத்தின் வரலாற்று ஆதாரமாக எடுத்தாளக் கூடாது? தமிழ் தலைவர்களின் மெத்தனத்தாலும் அதி மேதாவித் தனத்தாலும் உலகமே ஏற்றுவிட்ட மகாவம்ச ஆதாரத்தை எடுத்துக் கூறி எமது தாயகத்தையும் தன்னாட்சி உரிமையையும் பாதுகாக்கத் தவறிவிட்டோம்.

எமது தேசத்தின் மீது நடத்தப்பட்ட இரண்டாவது அந்நியர் படையெடுப்பாக கி.மு. 3ம் நூற்றாண்டில் வட இந்திய மௌரிய அரசன் அசோகச் சக்கரவர்த்தியின் புத்த மதப் பரப்பின் பொழுது நிகழ்ந்தது. அநுராத புர தமிழ் அரசன் மட்டும் தன்னிச்சையாக மதம் மாறினான் என மகாவம்சம் கூறுவதை அப்படியே நம்புவது இன்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மன நிலையாக இருப்பதைக் காண்கிறோம். அசோகன் பல போர்களை நடத்தி வெற்றி கொண்டவன். போர்க் களத்தில் ஒரு புத்த துறவியால் அறிவுக் கண் பெற்று புத்த மதத்துக்கு மாறினான் என்ற அம்புலி மாமாக் கற்பனைக் கதையை இரண்டாயிரம் ஆண்டுகள் போன பின்னரும் நம்ப வேண்டுமா?

அசோக மன்னன் மௌரியப் பேரரசின் சக்கர வர்த்தியாகி நாலா புறமும் கடல் கடந்த நாடுகளில் புத்த மதத்தை தனது ஆணைச் சக்கரமும் போதனைகளும் பதித்த கல் வெட்டுகளுடன் போதனை செய்யப் பிக்குகளையும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க படை அதிகாரிகளையும் அனுப்பினான் என்கிறது வரலாறு. ஆனால் இலங்கையில் மட்டும் பொய்களும் புரட்டுகளும் புனைகதைகளும் நிரம்பிய கதைகளை மகாநாம தேரர் என்ற வட இந்திய புத்த பிக்கு தொகுத்த மகாவம்சம் மட்டும் அசோகனின் மகனும் மகளும் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரக் கிளையுடன் இலங்கை வந்து தமிழ் அரசனை மதமாற்றம் செய்தனர் என்ற கதையை கூறுகிறது.

அதுவரை எந்த ஒரு மதத்தையும் சேராதவனாக அந்தத் தமிழ் அரசன் இருந்திருந்தால் இந்தப் புதிய மதம் மாறிக் கொள்ள ஒரு தூண்டுதலைக் கொடுக்க மாறினான் என நம்பி விடலாம். ஆனால் அவனோ பழம் பெரும் மதமான சைவத்தில் இருந்தவன். அவனது மக்களும் அதன் பாரம்பரியத்தில் பல நூற்றாண்டுகாளக ஊறியவர்கள். மேலும் புத்த மதம் புகுத்தப் பட்டு 2000 ஆண்டுகள் கழிந்துவிட்ட இன்றைய நாளிலும் சைவ கடவுள் வணக்கம் எல்லாச் சிங்கள பொது மக்களாலும் புத்த கோயில்களிலும் இடம் பெறுவதைக்; காண்கிறோம்.

அப்படியானால் அசோகன் படை எடுக்காமல் அல்லது படை அச்சுறுத்தல் செய்யாமல் புத்த மதத்துக்கு தேவநம்பிய தீசன் எனப் புதுப் பெயரில் தமிழ் மன்னன் எப்படி மாறி இருக்க முடியும்? எனவே போர் அல்லது படை பலம் கொண்டு தமிழர்கள் அன்றும் அடக்கப்பட்ட நிலையில்தான் புத்த மதம் தமிழ் மண்ணில் திணிக்கப் பட்டது. இன்றும் அதுதான் நடக்கிறது.

ஐ.நா அடுத்து என்ன செய்யப் போகிறது ?

2009 முள்ளி வாய்க்கால் இன அழிப்பும் இன்றைய தமிழ் மக்களின் நிலையும் சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாக சர்வ தேச பார்வைக்கு உள்ளாகி உள்ள நிலை பற்றி முன்னாள் இலங்கையின் ஐ.நா. நிரந்தர பிரதிநிதி கலாநிதி பாலித கோகண இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானம் பற்றிய தமது பகுப்பு ஆய்வுகளை செய்துள்ளார்.

அவை தனி ஈழம் பிறப்பதற்கான ஏது நிலைகளை விரிவாக விளக்குவதால் அகரம்; வாசகர் அவற்றைத் தெரிந்து கொள்ளவும் கற்ற லோனியா அரசியல் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதை ஊகிக்கவும் வசதியாக இருக்கும் என்பதால் தருகிறோம்.

" இலங்கையில் மீள் இணக்கம், பொறுப்புக் கூறல், மற்றும் மனித உரிமைகளை வளர்த் தெடுப்பது தொடர்பாக 2015 ஒக்டோபர் 1ந் திகதியில் 30/1 தீர்மானத்தை ஐ.நா.மனித உரிமைகள் ஆணைச் சபை ஏற்றிருந்தது. இதனை ஒரு அரசமைப்பு திருத்த திட்டம் என்பதாக சில விமர்சகர்கள் விபரித் திருந்தார்கள். அதன் சிறப்பு என்ன வென்றால் இலங்கை அரசே அதனை இணைந்து முன்மொழிந்தது என்பதாகும்.2017ல் இலங்கை அரசு தீர்மானத்தின் சரத்துகளை நிறைவேற்ற மேலும் 2 வருட கால நீட்டிப்பை கேட்டுப் பெற்றுக் கொண்டது. அதே நேரத்தில் 30/1 தீர்மானத்துக்கு கட்டுப்படுவதாக உறுதி மொழியும் கொடுத்தது.

எனவே, எந்த வித முன்னேற்றமும் இல்லாத நிலையில் இந்த வருடம் மற்றைய நாடுகள் சர்வ தேச நீதிமுறையை போர்க் குற்ற சந்தேக நபர்களுக்கு எதிராக அமுலாக்க முடியும் என (ஐ.நா.) உயர் ஆணையர் கருத்து வெளியிட்டுள்ளார்.உயர் ஆணையரோ மற்றும் அவரது ஆலோசகர்களோ ஒரு கணமாவது குறித்த தீர்மானம் பலமான எதிர்ப்புகளை கிளப்பி விட்டுள்ள நிலையைத் தெரிந்தும் வலுக் கட்டாயமாகத் திணிப்பதால் ஏற்படக் கூடிய பின்விளைவுகள் பற்றிச் சிந்தித்தது உண்டா?

அவரது இலட்சியத்தை அடைய வீதிகளில் அரத்தம் ஓடுவதைக் காண அவர்விரும்புகிறாரா ? இந்திய இலங்கை ஒப்பந்தம் வருடக் கணக்கில் இரத்தம் சிந்த வைத்ததை ஒருவர் நினைத்துப் பார்க்க வேண்டும்.

காலத்துக்கு காலம் உயர் ஆணையரின் பலவீனம் சம்பந்தப்பட்ட நாடுகள் சபையின் தீர்மானங்களை உதாசீனப் படுத்தி மிக மகிழ்ச்சியாக தப்பித்துப் போன தருணங்களை அனுபவத்தில் கண்டுள்ளோம். ஈரான், ஈஸ்ரவேல்,போன்ற நாடுகள் அவற்றுக்கு எதிரான பல தீர்மானங்களை மிக இலகுவாக உதாசீனம்

செய்துள்ளன.

சபையின் தீர்மானங்களைச் செயற்படுத்தாமல் விட்டால் வரக் கூடிய பின் விளைவுகள் உண்டா?
கட்டுப்படாத அரசின் மீது தண்டனை வழங்கும் அதிகாரம் சபைக்கு வழங்கப்பட வில்லை. ஆனால் தொடர்ச்சியாக பாரிய மனித உரிமை மீறுபவருக்கு தண்டிக்கும் அதிகாரரம் கொண்ட ஐ.நா.பாதுகாப்புச் சபை போன்ற சம்பந்தப் பட்ட அமைப்புகளுக்கு உள்ளது.

இவற்றை எல்லாம் பார்க்கும் பொழுது சிங்களம் தானே இணைந்து முன் மொழிந்த தீர்மானத்தை எந்த விதத்திலும் செயற்படுத்தப் போவதில்லை என்பதும் வாக்குறுதிப் படி அரசமைப்புச் சட்ட மாற்றம் தமிழரின் அரசியல் உரிமைகளை வழங்காது என்பதும் உறுதி படத் தெரிகிறது. எனவே நாமும் கற்ற லோனிய மக்களைப் போன்று பிடிவாதமாக மக்கள் வாக்கெடுப்பை ஐ.நா.மூலமாக நடத்தி எமது தயாக மீட்பை தனி நாடாக அமைக்கப் போராட வேண்டும்.

கற்ற லோனிய மக்களைப் பின்பற்றி நாடு கடந்த தமிழீழ அரசு உடனடியாகத் தனிநாட்டுப் பிரகடனம் செய்து சர்வதேச அங்கீகாரத் பெறப் போராட வேண்டும் என அகரம் கேட்டுக் கொள்கிறது. சர்வ தேச அங்கீகாரம் கிடைக்குமா கிடைக்காதா என்பது போன்ற பட்டிமன்ற விவாதம் எமக்குத் தேவை இல்லை. நாம் பல வருடங்களுக்கு முன்னரே செய்திருக்க வேண்டிய பிரகடனம் தேவையற்ற சந்தேகங்களாலும் குழப்ப வாதிகளாலும் மிக முக்கிய மான இப்பிரகடனம் 1974ல் வட்டுக் கோட்டைப் பிரகடனத்தோடு செய்திருந்தால் உலகம் முள்ளி வாய்க்கால் போரை ஆதரித்தே இருக்காது.

பாராளுமன்ற அரசிலை நம்பி வாழும் எமது தலைவர்களால் ஒன்றுமே ஆகப் போவது கிடையாது. புலம் பெயர் தேச நாடு கடந்த தமிழீழ அரசுதான் எமது விடுதலைப் போரை மிகத் தீவிரமாக எடுத்துச் செல்ல தனிநாட்டுப் பிரகடனம் எமது உடனடித் தேவையாக மாறிவிட்டது.






KERVEN GMBH
Lebara play
2018
எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
இவற்றை HD இல்
பார்த்து மகிழலாம்
TV HD
KTV
ஆதித்யா
MUSIC
HD only Lebara play
VIJAY
IBC தமிழ்
Shakthi TV GLOBAL
Raj
மக்கள்
CAPTAIN TV
சித்திரம்
Raj NEWS
J MOVIE
JAYA MAX
முரசு
Raj MUSIX
Raj DIGITAL PLUS
THARAKAI
JAYA TV
வேந்தர்
புதிய Lebara Play
வேண்டுவோருக்கு இரண்டு ஐ.பி.சி
தமிழா 40யூரோ பெருமதியான
நுழைவுச்சீட்டு இலவசமாக
வழங்கப்படும்
TEMPO
MONEY TRANSFER
துரித பணமாற்றுச் சேவைக்கு
எம்மை நாடுங்கள்
www.kerven-gmbh.com
KERVEN GMBH
Rheinische Str. 64 | 44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com
KERVEN GMBH
191 Rue du Faubourg 75010 Paris
Tel : 09 77 19 59 11 | Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com
KQS GmbH IBAN: DE43 4404 0037 0212 0087 00 BIC: COBADEFFXXX
புதுப்பிக்கும் எமது வாடிக்கையாளர்கள் புதிய Set top Box V3 ஐ பெறுவதற்கு
9.99€ மட்டும் மேலதிகமாகச் செலுத்தினால் போதும்

# மறக்கப்பட்ட முன்னோடிகளின் வரிசையில்

# கோபு

சண் தவராஜா



தமிழ் ஊடகத்துறை மற்றுமொரு மாபெரும் இழப்பைச் சந்தித்துள்ளது. இம்முறை எமை விட்டுப் பிரிந்தவர் எஸ்.எம். கோபாலரெத்தினம். தமிழ் ஊடகவியலாளர்கள் கதாநாயக அந்தஸ்தைப் பெற்றிருந்த காலகட்டத்தில்தான் அவருடனான எனது முதல் சந்திப்பு நிகழ்ந்தது. மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த தினக்கதிர் பத்திரிகை அலுவலகத்தில் 2001 இன் இறுதியில் என நினைக்கிறேன். வெண் தாடியுள் முகத்தை மறைத்துக் கொண்டு புன்முறுவலோடு என்னை வரவேற்றார். ஊடகத்துறையுள் பிரவேசித்து 7 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் கூட தமிழ் ஊடகத்துறை ஜாம்பவான்களுள் ஒருவரான அவர் பற்றி முன்கூட்டியே நான் அறிந்திருக்கவில்லை. முதல் சந்திப்பிலேயே தான் எழுதிய 'ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூலைப் பரிசளித்தார்.

அவருடனான சந்திப்பின் முடிவில் அவர் ஒரு நிறைகுடம் என்பதையும், ஊடகத்துறையில் பணியாற்றிய என்போன்ற கத்துக்குட்டிகளுக்கு முன்னோடியும் வழிகாட்டியும் என்பதையும் புரிந்து கொண்டேன். என்னைப் போன்றோரையும் முன்கூட்டியே அறிந்து வைத்திருந்த அவர், நீண்டநாள் நண்பனோடு உரையாடுவது போல் எம்மோடு சகஜமாகவும் உரையாடினார். முதல் சந்திப்பிலேயே அவர் எம்மை வசீகரித்தும் இருந்தார்.

அன்றைய காலகட்டத்தில் அமரர் சிவராம் அவருடைய புகழ் எங்கும் ஓங்கியிருந்தது. எம்மைப் போன்ற இளைய தலைமுறை ஊடகவிலாளர்கள் பகிரங்கமாகவே அவரைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு பணியாற்றி வந்தனர். எஸ்.எம். கோபாலரெத்தினம் அவர்கள் கூட – எந்தவித கிலேசமும் இன்றி – சிவராம் அவர்களுடைய கருத்துக்கு மதிப்பு அளித்ததுடன், அவரின் சொற்படி கேட்டு நடப்பதற்கும் தயாராக இருந்தார்.

எஸ்.எம்.ஜி. எனப் பரவலாக அறியப்பட்ட அவரின் நூலை முழுவதுமாக வாசித்த பிற்பாடு, அவர் மீதான என் மதிப்பு மேலும் உயர்ந்தது.

ஒரு காலகட்டத்திற்குப் பின்னர் எங்கள் நட்பு வெகு இறுக்கமாகியது. இனிய மாலைப் பொழுதுகளைத் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டோம். வம்பளப்பதோடு, மக்கள் நல நடவடிக்கைகள் பற்றியும் மணிக் கணக்கில் பேசினோம். பொழுது போக்கிற்கான நேரம் என வரையறை செய்தாலும், அதிலும் கூட ஏனையோருக்கும் பயன்மிக்க விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டும் என்பதில் கரிசனையாய் இருந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் பங்கு கொண்டவர்கள் என்ற அடிப்படையில், அதனை ஒரு கூட்டு இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற சிந்தனையில் 2002 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் அவர்களின் நாடாளுமன்றச் செயலாளராக ஒரு வருடம் பணியாற்ற நேர்ந்ததில் கோபு அவர்களுடனான எனது நெருக்கம் தற்காலிகமாக விடுபட்டுப் போனது.

சமாதானச் சூழல் குழம்பி மீண்டும் யுத்தம் கருக்கொண்ட காலத்தில் ஏற்பட்ட கருணாவின் பிளவு, என் போன்றோரை நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்தித்தது. அதனால் கோபு அவர்களுடனான தொடர்பு முற்றுமாக அறுந்து போனது.

2004 இல் சுவிஸ் வந்தது. அதன் பின்னான சமாதானப் பேச்சுக் காலகட்டம் என்பவற்றில் கோபு அவர்களின் பெயரை ஓரிரு தடவையே கேட்க முடிந்தது. இறுதியாக அவர் சுடரொளியில் பணியாற்றியதாக அறிய முடிந்தது.

2009 மே வரை நிதானிக்க முடியாத ஓட்டத்திலேயே வாழ்க்கை நகர்ந்தது. இடைக் காலத்தில் எத்தனை சந்திப்புகள், எத்தனை போராட்டங்கள், எத்தனை பயணங்கள் ஞ்..? அனைத்துக்கும் முற்றுப் புள்ளியாய் முள்ளி வாய்க்கால் அமைந்தது.

இடைப்பட்ட காலத்தில், ஒருவரைப் பற்றி மற்றவர் விசாரிக்கக் கூடிய அவகாசம் இருக்கவில்லை. தினசரிச் சாவுகள் எம்மை அழுத்திக் கொண்டிருந்தன.

போர் ஓய்வுக்கு வந்திருந்த விதம் மனதை வாட்டி வதைத்தது. அந்த நினைவுகளில் இருந்து விடுபட்டு நிதானிக்க ஒரு சில ஆண்டுகள் தேவைப்பட்டன.

ஒருமுறை யேர்மன் சென்றிருந்த வேளை கோபு அவர்களின் மகன் கபிலனைச் சந்தித்த போதில் கோபு மட்டக்களப்பில் வசிக்கிறார் என்ற சேதி கிடைத்தது.
ஓரிரு ஆண்டில், அவர் தெல்லிப்பளையில் முதியோர் இல்லத்தில் இருப்பதாகச் செய்தி கிடைத்தது. இதில் ஆச்சரியப்பட எதுவும் இருக்கவில்லை. ஏனெனில், கோபுவோடு பழகியவர்களுக்கு அவரது முன்கோபத்தைப் பற்றி நன்றாகவே தெரியும். அவரது பிடிவாதக் குணம் முரட்டுத் தனமானது. வாழ்க்கை ஒரு வட்டம் என்பதை நிரூபிப்பதைப் போன்று மீண்டும் மட்டக்களப்பு மண்ணில் வசிக்கச் சென்று கோபு எமை விட்டுப் பிரிந்துள்ளார்.

மரணம் இயற்கையின் விதி என்பது அறிவுக்குத் தெரிந்தாலும், மனது என்னவோ அரித்துக் கொண்டே இருக்கின்றது. கோபு அவர்களை அவரது வாழ்நாளில் நாம் சரியாகக் கௌரவிக்கத் தவறி விட்டோமோ என்ற கேள்வி என் முன்னே பூதாகரமாக எழுந்து நிற்கிறது. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களே தனது கையால் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்த பின்னர் அதைவிடப் பெரிய கௌரவம் அவருக்குத் தேவையா என்ற கேள்வி எழலாம்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் கையால் தான் வாழும்போதே அதி உச்ச கௌரவத்தைப் பெற்றே ஒரேயொரு தமிழ் ஊடகவிலாளன் கோபு என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், ஒரு மனிதனுக்கு அதிக மனமகிழ்வைத் தரக் கூடியது அவனது பணி சார்ந்தோர் வழங்கும் பாராட்டே. தமிழ் ஊடக சமூகம் அதனைச் செய்யத் தவறி விட்டது என்றே கூற வேண்டும். விருதுகளும், பாராட்டுக்களும் மலிந்துவிட்ட இன்றைய காலச்சூழலில் கோபு என்ற ஊடக ஆளுமை

Orient 27வது ஆண்டில்... Textiles and Jewellery
2017ம் ஆண்டிற்கான புத்தம் புதிய வரவுகளுடன் தொடரும் மலிவு விற்பனை!
PRICE DOWN




25 ஆண்டுகளாக எம்மோடு பயணித்த அனைத்து
வாடிக்கையாள அன்பர்களுக்கும் எமது நன்றிகள்!!!
உரிமையாளர்: S.ஜெகதீஸ்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund, Germany
Tel: 0231 16 23 77
Fax: 0231 14 78 36

மறக்கப்பட்டு விட்டது பெருங்குறையே.


இதைவிடவும் பெரிய கொடுமை கோபு அவர்களின் இறுதி நிகழ்வில் பெருமளவிலான ஊடகர்களோ, அவரது பணியின் பலனை அனுபவித்த தமிழ் மக்களோ பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்ற செய்தி வெளியாகியமை. எதனால் இது நிகழ்ந்தது எனப் புரியவில்லை. 50 வருடங்களுக்கு மேலாக ஊடகப்பணி ஆற்றிய கோபு என்ற ஊடகவிலாளனுக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானமா இது அல்லது ஒட்டுமொத்த ஊடகத்துறையையே புறக்கணித்த செயலா என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஈழப் போராட்ட முன்னோடியும், கவிஞரும் ஊடகவியலாளருமான கி.பி. அரவிந்தன் அண்மையில் எமைவிட்டுப் பிரிந்த போதில் அவரது இறுதி நிகழ்வில் குறைந்த எண்ணிக்கையானோரே கலந்து கொண்டிருந்தனர் என்பதையிட்டு நான் ஒரு பதிவை மேற்கொண்டு இருந்தேன். 'தோழர் கி.பி. அரவிந்தனின் இறுதி நிகழ்வு – சில மனப் பதிவுகள்' என்ற தலைப்பில் 2015 ஏப்ரல் மாதம் நான் எழுதிய கட்டுரையில், தமிழ் மக்களுக்காக, தமிழ் மக்களின் நலவாழ்வுக்காக, தமிழீழப் போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்ட முன்னோடிகளை சமூகம் புறக்கணிப்பது அல்லது அவர்கள் விடயத்தில் பாராமுகமாக இருப்பது தொடர்பான எனது மனவேதனையைப் பதிவு செய்திருந்தேன். அவர் நினைவாக ஒரு அஞ்சலிக் கூட்டத்தை சுவிஸ் நாட்டில் நடாத்த நான் மேற்கொண்ட முயற்சி தோல்வியிலேயே முடிந்து போனது.

அதுவே, கி.பி. அரவிந்தன், கோபுவைப் போன்றோரின் விதியா என்ற கேள்வி எழுகிறது. இறந்தவர்கள் போக இருப்பவர்களின் மன உற்சாகத்தையும் இத்தகைய புறக்கணிப்புக்கள் குலைத்துவிடும் என்பதே உண்மை.

தமிழ் மக்கள் மறந்தாலும், 'பொருளும், புகழும் சம்பாதிப்பதே ஊடக தர்மம்' எனக் கருதிச் செயற்படுவோர் மறந்தாலும், எங்களைப் போன்றோரின் மனதில் கோபு என்றும் வாழவே செய்வார். ஆயிரம் கைகள் கொண்டு மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை. அதைப் போன்று தமிழ் ஊடக வரலாற்றில் கோபு அவர்களின் வகிபாகத்தை யார் மறைக்க நினைத்தாலும் முடியாது என்பதே நிதர்சனம்.



பாகம் 1

மனோ

# வட மாகாண முதலமைச்சர் விக்கனேஸ்வரனின் விஸ்வரூபம்!

சிறீ லங்காவின் மல்வத்தை அஸ்கிரிய பௌத்த மத பீடாதிபதிகளை வெறுமனே இலங்கை அரசியல்வாதிகள் மட்டும் மண்டியிட்டு ஆசிபெற்ற காலம் போய் அமெரிக்க இந்திய அரசுகளின் தலைவர்களே இன்று மண்டி இட்டு ஆசிபெறும் காலமாக மாறி விட்டதை நாம் காண்கிறோம். அவர்களின் தயவும் ஆசியும் இல்லாமல் இலங்கையின் எந்த ஒரு ஆட்சியாராலும் பதவியைக் காப்பாற்ற முடியாது என்பதுதான் உண்மையான கள நிலவரம்.

அமெரிக்க இராசாங்க அமைச்சர் வந்தார் மண்டியிட்டு ஆசி பெற்றார். அவரைத் தொடர்ந்து அரசு முறைப் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டுத் தலைவர்கள் பலரும் பீடாதிபதிகளை வணங்கி ஆசிபெறாமல் திரும்பியது கிடையாது. இந்தியப் பிரதமர் மோடியோ ஒவ்வொரு ஒப்பந்தம் போடும் பொழுது விழுந்து விழுந்து சேவித்துத் திரும்புகிறார்.



நிலை இந்த அளவுக்குப் பூதாகாரமாக இருக்கையில் திரு விக்கினேஸ்வரன் வடமாகாண முதல் அமைச்சர் என்ற அற்ப பதவியைக் கூட தக்க வைக்க தவிக்கும் ஒரு சுண்டெலி எனப் படத் தக்கவர் தமது சக அமைச்சர் திருமதி எழிலன் அல்லது அனந்தி சசிதரன் என்ற பெண் அமைச்சருடன் சென்று இவ்விரண்டு பீடாதி பதிகளிடமும் தமிழுக்கு சமஷ்டி முறை ஆட்சிதான் வேண்டும் எனக் கேட்பது சாதாரணமான விடயமா?

60 ஆண்டுகளுக்கு மேலாக இதே பீடாதிபதிகள் சமஷ்டி என்றால் நாட்டைப் பிரிப்பது என பல இனக் கலவரங்களை நடத்தியவர்களிடம் அவர்களது சொந்த இருப்பிடங்களில் போய்ப் பேசி அதற்கான ஆவணங்களையும் கையளித்து விட்டு சுற்றி இருந்தவர்களின் கேள்விகளுக்கும் சட்ட ரீதியான தர்க்க ரீதியான பதிலைக் கூறி அவர்களின் வாய்களை அடைத்து விட்டுச் சிரித்தபடியே வெளியேறினார் என்கிறார் தொலைக்காட்சியில் பார்த்ததை விமர்சித்த சிங்கள அரசியல் ஆய்வாளர் சன்ஜா டி சில்வா ஜயதிலகா.


அப்படிப் பேசிவிட்டு வந்தவர் குஷால் டி சில்வா என்ற சிங்கள எழுத்தாளரின் புத்தக வெளியீட்டில் பேசியவை மேலும் துணிச்சலும் அதிர்ச்சியும் கொண்டவையாக இருந்தன. அவற்றில் சிலவற்றை அகரம் வாசகருக்காக பெருமையோடு முன்வைக்கிறோம். காரணம் உலகம் காணும் தொடை நடுங்கிகள் கொண்ட தமிழர் தலைமைதான் உண்மையான தமிழரின் முகம் அல்ல. முந்தைய தமிழர்கள் உண்மைவழி நின்று சிங்களத் தலைமைக்கு ஆதரவு வழங்கினார்களே அல்லாது மேலும் மேலும் ஏமாறும் ஏமாளிகள் என்பதனால் அல்ல என்பதை உலகுக்கு காட்ட வேண்டிய வேளை வந்து விட்டது.

திரு. விக்கினேஸ்வரனின் இந்த முகம்தான் அம்பாறை

முதல் ஆனைக் கோட்டை வரை கேப்பாப் புலவு முதல் மன்னார் திருமலை மாவட்டங்களில் உள்ள தமிழ் மக்கள் நடத்தி வரும் உரிமைப் போராட்டங்கள் உலகத்துக்குச் சொல்ல முற்படும் செய்தி.

இனி முதலமைச்சின் பேச்சைப் பார்ப்போம்.கடந்த செப்டெம்பர் 12ம் திகதி எழுத்தாளர் குஷல் பெரேராவின் புத்தக வெளியீட்டு விழாவில் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகளை அகரம் வாசகர்களுக்காக இங்கே தருவதில் மகிழ்கிறோம்.

"குஷால் எங்களது நண்பர் என்பதை விடவும். அவர் கடந்த வார இறுதியில் மகாநாயக்க தேரர்களைச் சந்திக்க எங்களுடன் அன்பு கொண்டு வந்திருந்தார். அவரால் அறிமுகப் படுத்தப்படும் புத்தகமும் கூட ஒரு நண்பரைப் பற்றியது அதாவது ராஜபக்ஷ சிங்களத்தின் சுய பிம்பம் என்பதாகும்.



மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகள் எதிர் எதிர் குணாம்சங்களின் வடிவங்களாகத் தென்படுகிறார்கள். மகிந்தர் மல்வத்தையை விடவும் அஸ்கிரியவுடன் ஆத்மார்த்தமான நெருக்கமாக இருப்பார் என உறுதியாக நம்புகிறேன்.

மல்வத்தை பீடாதிபதி மலர்ந்த முகத்துடன் வரவேற்றார் ஆனால் அஸ்கிரிய பீடாதிபதி அப்படி அல்லாமல் வெறும் உத்தியோக பூர்வமாக நடந்து கொண்டார். அஸ்கிரிய பீடாதிபதியை அதன் காரியச் சபை பீடாதிபதியின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறதா என ஒருவரைச் சிந்திக்க வைக்கிறது.மல்வத்தை பீடாதிபதி மனிதாபிமானம் கொண்டவராயும் மக்களின் துன்பங்களை குறைப்பதிலும் ஆர்வமுடையவராய் இருந்தார்.

அஸ்கிரிய காரிய சபை உறுப்பினர்கள் உயர் பீடாதிபதியை நான் சந்திப்பதற்குத் தடையாய் இருந்தனர். அவர்கள் உயர் பீடங்களில் அமர்ந்து கொண்டு இருக்கையில் நானும் எனது குழுவினரும் தாழ்வான தளத்தில் பஞ்சனை இருக்கைகளில் இருந்தோம். அவர்கள் தமது சிங்கள பௌத்த உணர்வுகளை காட்சிப் படுத்துவதில் ஆர்வமாக இருந்தனர்.

அவர்கள் திமிர்த் தனத்தோடும் வெறுப் பேர்த்தும் அளவுக்கு சுய ஆதிக்கத்தோடு இருந்தார்கள். சமஷ்டி என்றால் நாட்டைப் பிரிப்பது என்ற மன நிலையை ஏற்படுத்திக் கொண்டு விட்டார்கள்.



அண்மையில் ஒரு உச்ச நீதி மன்றத் தீர்ப்பு சமஷ்டி ஆட்சி பிரிவினை அல்ல என்பதை உறுதிப் படுத்தி உள்ளது அது மாறுபட்ட பகுதிகளை ஒன்றுபடுத்தும் வழி எனவும் அவர்களுக்கு சுட்டிக் காட்டினேன்.

19301940ல் பிரித்தானிய ஆணைச்சபை முன்பு கண்டிக் கல்விமான்கள்தான் முதலில் தமது தனித்துவத்தைப் பாதுகாக்க சமஷ்டி வேண்டும் எனத் தெரிவு செய்தனர் எனவும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினேன். சமஷ்டியைத் தெரிவு செய்வதன் மூலம் தமது தனித்துவத்தைக் பாதுகாக்க விரும்புவதாக கண்டியர்கள் சொன்னார்கள்.

அஸ்கிரிய பீடாதிபதி மனம் மாறியதாகக் காணப்படவில்லை. எங்களால் அஸ்கிரிய பீடாதிபதியின் கடுநிலை ஆணவத் திரையை கடக்க முடிந்தால் இந்நாட்டின் அரசியல் பிரச்சினைகளை விரைவில் தீர்த்துவிட முடியும். அவர்கள் சிங்கள பௌத்தர்களின் மிகப் பலமான பகுதியாகக் காணப்படுகிறார்கள். அந்த அளவுக்கும் எமது சந்திப்பு ஒரு உண்மைகணைக் கண்டறியும் ஒன்றாக இருந்தது.

சிங்கள பௌத்தர்களின் கடுநிலையாளர்களைச் சந்திக்க வேண்டும் என நான் எப்பொழுதும் கூறிவந்துள்ளேன். நான் காரிய சபை உறுப்பினர்களில் சிலரைக் கண்டுள்ளேன்.போதுமான காலம் கிடைத்தால் அவர்களில் சிலரை அவர்களது கடும் போக்கிலிருந்து பிரித்து எடுத்துவிட முடியும். அவர்களை மல்வத்தை பீடாதிபதியைப் போன்று மனிதாபிமானம் கொண்டவர்களாக வரச் செய்ய முடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களது அகங்காரம்

செயற்கையானது. அது பிழையான நம்பிக்கைகள், தவறான அனுமானங்கள் மற்றும் திரிபு படுத்தப்பட்ட பார்வைகளின் மீது நிலை நிறுத்தப்பட்டவை. ஒரு தடவை உண்மைகள் சொல்லப் பட்டால் அல்லது அறியப் பட்டால் அவர்கள் தமது வெறுப்பு மற்றும் சந்தேகங்களை விடுத்து உண்மையான அடிப்படைப் புத்த தளமான புரிதல், அன்பு என்பவற்றுக்குத் திரும்பிவிடுவார்கள்.

அடுத்து அவர் மகிந்தரைப் பற்றிப் பேசியவற்றில் சில: ராஜபக்ஷ எப்படிப் பட்ட மனிதர் என குஷால் பார்க்கிறார் ? அவரும் அவருடைய நண்பர்தான் யார் ராஜபக்ஷ ஒரு சிங்கள சுயபிம்பம் செல்பி என்பது எங்களை நாங்களே படம் பிடித்துக் கொள்வதைச் சொல்வது.ஒருவர் மகிந்த ராஜபக்ஷவை எடுத்தால் அவர் ராஜபக்ஷவாக காணப்படுவதில்லை, ஆனால் ஒரு சிங்கள மனிதராக இருக்கிறார்.

எப்படிப்பட்ட சிங்கள மனிதர் அவர் என்பதைப் பற்றிதான் தமது புத்தகத்தில் குஷால் பேசுகிறார். தமது முகவுரையில் மகிந்தரைப் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார் ''அப்படியாக மகிந்தரில் ஒரு இலகுவான நண்பராக அடிக்கடி ஒத்துக் கொள்வதும் மிக அரிதாக ஒத்துக் கொள்ளாமலும் நான் கண்டு கொண்டேன். உண்மையில் அவர் தமது வசதிக்காக ஒரு போதும் ஒத்துக் கொள்வதே இல்லை,"

மகிந்த ராஜபக்ஷ பற்றிய இந்த விளக்கம் ஒரு அச்சொட்டான உண்மை. வட மாகாண முதலமைச்சராக 2013 அவர் முன்னால் சத்தியப் பிரமாணம் எடுத்திருந்தேன். அந்த அளவுக்கு அவர் மிகவும் அன்பு காட்டினார்.

பின்னர் 2014ல் நான் சென்று அவரது உத்தியோக வதிவிடத்தில் சந்தித்தேன். அவர் நிறையவே கனிவு காட்டினார்.சேவைக் காலம் முடிவுறும் தருவாயில் இருந்த இராணுவ ஆளுநரின் இடத்துக்கு புதியவர் நியமனம் உட்பட 10 கோரிக்கைகளை வைத்திருந்தேன். நான் சொன்னேன், அங்கே ஒரு இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளுநராக நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை அதனால் ஒரு பொது மகனை இருக்கும் ஆளுநரின் இடத்தில் நியமிக்க வெண்டம் எனக் கேட்டேன்.

''நிச்சயமாக நாங்கள் மாற்ற வேண்டும், ஆனால் அவரது பதவிக் காலம் ஜூலையில் முடியும் வரை அவர் காத்திருக்கட்டும். அதன் பிறகு நான் கட்டாயம் ஒரு பொது மகனை நியமிப்பேன் " என்றார். அவர் பாராட்டும்படியாக இருந்தார்.உண்மையாகவே புது நியமனங்களாக தகுதியானவர்களின் பெயர்களைக் கேட்டார் நானும் சில பேர்களை கொடுத்திருந்தேன்.

ஜுலை மாதம் வந்தபொழுது எனக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மிக இலகுவாக மறந்தவராக அதே இராணுவ பின்னணியைக் கொண்ட ஆளுநருக்கு பதவிக் கால நீடிப்பை கொடுத்தார். அவர் கவனமாக படித்து நிறைவேற்ற ஒத்துக் கொண்ட நான் கொடுத்த 10 கோரிக்கைகளில் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை என நான் நினைக்கிறேன். அதுதான் சிங்கள சுய பிம்பம். அவர் ஏதாவது சொல்லுவார் அதே நேரத்தில் வேறொன்றை மனதில் வைத்திருப்பார். இரட்டைநிலைதான் அவரது தற்காப்பு.

இன்னும் ஒரு முக்கிய பார்வையை குஷால் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அதாவது புலம் பெயர் தமிழர் பயங்கரவாதம் என்ற சொல்லின் முழுமையான அரசியல் தாக்கங்களைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டது என்பதாகும். இளைய ஜோர்ஜ் புஷ்ஷின் காலத்தில் செப்டெம்பர் 11ல் நியூ யோர்க்கில் துன்ப நிகழ்வின் பின்னர் உலக அரசியலில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டது. அது ஐக்கிய அமெரிக்க ஊளவுத் துறை மற்றும் ராஜாங்க அதிகாரிகளை எல்லா ஆயுத அரசியல்களையும் பயங்கரவாதம் அல்லது அல் குவைதாவின் சம நிலையில் தரப் படுத்தி பட்டியலிட்டது. ராஜாபக்ஷ அதனை மூலதனமாக்கி தமிழ் போராளிகளை அல் குவைதா போன்று பயங்கரவாதிகள் என அழைத்தார்.


இப்பொழுதும் கூட சில ஊடகத் தரப்பினர் தமிழ் போராளிகளை தீவிரவாதிகள் எனவும் பயங்கரவாதிகள் எனவும் குறிப்பிடுவதைக் காண்கிறேன். உலக அரங்கில் தமிழ் போராளிகளின் எல்லாச் செயற்பாடுகளும் பயங்கரவாத செயல்களாகக் குறிப்பிடப் படுகின்றன. அந்த அளவுக்கு ஒரு உள்நாட்டு அரசியல் போராட்ட எழுச்சியை ஒரு உலக நிகழ்வாக மகிந்தர் மாற்றிவிட்டார்.



இன்று இந்தப் புத்தகம் கூறுவது எல்லாம் இவற்றைத்தான். மகிந்த ராஜபக்ஷ பற்றிய புத்தக வெளியீட்டுக்கு விக்கினேஸவரன் எதற்காக ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற கேள்விகள் கேட்கப் படுகின்றன.'' சம்பந்தன் மகிந்தருடன் கொஞ்சுகிறார் விக்கினேஸ்வரன் அதற்கு பூங் கொத்து கொடுக்கிறாரா? '' என்பதாக இரகசிய பேச்சுகள் உள்ளன.
(மிகுதி பாகம் 2ல்)

# ImmoFinance
## Suisse GmbH





Contact :
**Selvaratnam Mathan**

- புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
- வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
- சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
- முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்



076 303 22 16
mathan@gmx.ch


வரசித்தி மஹால்
Varasithy Mahall

**Swiss, Zürich** மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்திமஹால் மண்டபம்



சகல விதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும் நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில், அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், மனம் கவர்ந்த, ஒரே அழகிய மண்டபம்...





எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா


அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

**800 இருக்கை வசதியும் - 400 வாகன தரிப்பிடமும் கொண்ட மண்டபம்.**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

**K. Kowthaman** 079 317 82 36 | **S. Manivannan** 079 128 55 61 | **K. Vijayasuresh** 079 275 68 62

Web: www.varasithy-mahall.ch | E-Mail: varasithymahall@hotmail.com




# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

## பாகம் 70

-அன்புச் செல்வன்-

"சிங்களவர் எமக்கு எதையும் தரமாட்டார்கள். நாங்கள் எமது உரிமைகளை சர்வ தேச சட்டங்களின் கீழ் பெறப் பாடுபட வேண்டும்."

– கொழும்பு ரெலிகிராஃப் இணையத்தில் வட மாகாண சபை முதலமைச்சர்

"நாம் எமது மதிப்பையும் மரியாதையையும் பயத்தையும் படிப்பறிவில்லாத ஆயுதம் தரித்த சிங்களச் சிப்பாய்களுக்கு காட்டுகிறோம். ஆனால் நாம் எமது படிப்பறிவு பெற்ற அன்புள்ள தமிழ் சகோதரர்களை பொறுத்த வரை அவர்களுக்கு எமது போட்டி பொறாமை என்ற உணர்வுகளை வெளிப் படுத்துகிறோம். எங்கள் தமிழ் சமூகத்தைப் பொறுத்த வரை அவர்களுடன் ஒற்றுமையாக வாழ்வது அத்தனை கடினமான சாதனையாகத் தெரிகிறது."

திரு.விக்கினேஸ்வரன் தமது வாரம் ஒரு கேள்வி என்ற தொடரில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம் ? என்ற எமது தொடருக்கு மிகப் பெரும் வலுச் சேர்க்கும் வாக்கு மூலமாகும்.

வடமாகாண முதலமைச்சர் நேற்று வரை சிங்களவரின் இணக்கப் பாட்டுடன் தமிழ் மக்கள் சம உரிமை சமவாய்ப்பு பெற்ற ஒன்றுபட்ட இலங்கைத் தீவில் வாழ முடியும் என நம்பி வாழ்ந்தவர்;. பல்வேறு சிங்களக் கிராமங்களிலும் நகரங்களிலும் பல்லாண்டுகளாக நேசமுடன் வாழ்ந்தவர். அவருக்கு இருக்கக் கூடிய சிங்கள நண்பர்களின் எண்ணிக்கை அளவுக்கு நம்மவர் யாரும் கொண்டிருக்க வாய்ப்பில்லை. அவரது இரண்டு மகன்களும் சிங்களக் குடும்மங்களில் மணம் புரிந்து குடும்ப வாழ்வை நடத்தி வருகிறார்கள். எனவே இவர்போல் சிங்கள தமிழ் இன ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக வேறு எவரையும் இலங்கைத் தீவில் காட்ட முடியாது.

இலங்கை அரசுகள் தமிழ் மக்கள் மீது போர் நடத்திய போது அதைக் கண்டித்து எது வித அரசியலும் செய்தவராக அறியப் படாதவர் போர் முடிந்து மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரிந்து போன அரசியல் செல்வாக்கை சரி செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்தால் திரு சம்பந்தனாலும் சுமந்திரனாலும் வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக போட்டி இட்டு மக்கள் பேராதரவால் அரசியல் நடத்த வந்தவர்.

மக்களோடு மக்கள் தலைவராக தம்மை அடையாளப் படுத்தி இன்று நேர்மையான அரசியல் செய்ய முன்வந்திருப்பவர். அவரை எந்த வகையிலும் ஒரு தமிழ் அரசியல்வாதி எனவோ தமிழ் இனவாதி எனவோ அடையாளம் காணப்பட முடியாதவராக தமிழ் மக்களின் இன அரசியல் உரிமைகளுக்காக கொடுத்து வருகிறார்.

சென்ற மாதம் வரை சிங்கள பௌத்த குருமாரின் அதி உயர் பீடாதி பதிகளான அஸ்கிரிய மல்வத்தை ஆதீனங்களின் ஆதரவு கேட்டு சமஸ்டி ஆட்சிக் கோரிக்கை வைத்து ஏமாற்றம் அடைந்த நிலையில் இப்பொழுது "சிங்களவர் எமக்கு எதையும் தரமாட்டார்கள். நாங்கள் எமது உரிமைகளை சர்வ தேச சட்டங்களின் கீழ் பெறப் பாடுபட வேண்டும்." எனப் பேசத் தொடங்கி உள்ளார்.

சர்வ தேசச் சட்டங்களின் கீழ் தமிழருக்கான

உரிமைகளை பெறுவது என்றால் அது ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வாக சிங்களப் பாராளு மன்றத்தின் ஆணையோ ஒப்புதலோ இல்லாத சர்வ தேச சட்ட விதிகளுக்கு மட்டுமே உட்பட்ட தீர்வாகவே இருக்கும். அப்படியான ஒரு தீர்வு வந்துவிடக் கூடாது அதே நேரத்தில் சிங்களப் பேரினவாத பௌத்த பிக்குகளின் பயங்கரவாத ஆட்சியாகத் தொடரவே 1930 தொடக்கம் ஆட்சி நடத்திய அனைத்து தலைவர்களும் கட்சிகளும் திட்டமிட்டு தமிழின அழிப்பைச் செய்து வந்தன.

2009ல் இனஅழிப்பை நடத்திய பின்னரும் ஆட்சிக்கு வந்த இன்றைய நல்லாட்சி உட்பட எந்த அரசுமே தமிழின அழிப்புத் திட்டங்களை கைவிடத் தயாரில்லை என்ற உண்மை உலகமே அறிந்த ஒன்றாக உள்ளது. சர்வ தேசச் சட்டம் ஐ.நா. பொதுச் சபையால் மட்டுமே செயற் படுத்த முடியும். அப்படி ஏதும் நடந்து விட்டால் சிங்கள பேரினவாத ஆட்சி தொடர முடியாது என்பதை அனைத்து சிங்களத் தலைவர்களும் நன்றாகவே அறிந்து வைத்துள்ளனர்:.

அதனால்தான் அவசர அவசரமாக இரண்டு தமிழ் நியமன உறுப்பினர்களை நியமித்து அவர்களின் வாக்குப் பலத்தால் 1972ல் ஸ்ரீமாவோ குடியரசு ஆட்சியை ஏற்படுதினார். அதற்குக் காரணமா இருந்தது தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து பிரித்தானிய பிரபுக்கள் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை செயலற்றது ஆக்குவதற்காக பிரித்தானிய நீதி நிர்வாகக் கட்டமைப்பில் இருந்து இலங்கையை விடுவிப்பது முக்கிய நோக்கமாக இருந்தது.

அவ்வாறு குடியரசுப் பிரமானம் செய்யாது போனால் 1956ல் பண்டா இயற்றிய சிங்களம் மட்டுமே அரசாங்க மொழி என்ற சட்டம் சோல்பரி 29 விதிப்படி சட்ட விரோதமானது என உயர் நீதி மன்றத்தால் தீர்ப்பளிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டு பெரும் அரசியல் குளப்பமே உருவாகும் நிலை ஏற்பட்டிருக்கும். அப்படியான நிலையைத் தவிர்க்கவே ஸ்ரீமா அரசமைப்புச் சட்டத்தையே மாற்றி சிங்கள இனமேலாதிக்க அரசியலில் ஒரு முன்மாதிரியாய் திகழ்ந்தார்.

போர்க் குற்ற விசாரணை சர்வதேச மயப் படுத்தினால் அதன் விளைவுகள் தனித் தமிழ் ஈழத்துக்கு வழி செய்து விடும் என்பதால் இலங்கை அரசு தொடர்ந்து சர்வ தேச விசாரணைக்கு மறுப்புத் தெரிவித்து வருகிறது. சர்வ தேச சட்டவாளர்களை பார்வை யாளராகக் கொண்ட கூட்டு நீதிப் பொறி முறையைக் கூட சிங்கள அரசு ஏற்க மறுக்கும் மர்மம் நாடு பிரிக்கப்படும் ஆபத்தை ஏற்படுத்தி விடும் என்ற பயம்தான்.

இந்தப் போருக்கே காரணம் இந்தியாதான் என்பது இலங்கைக்கும் அமெரிக்கா சீனா போன்ற நாடுகளுக்கும் தெரியும். சர்வ தேச போர்க் குற்ற விசாரணை வந்தால் இந்தப் போரில் தமது நாட்டு இராணுவ கேந்திர வர்த்தக ஆதாயங்களுக்காகப் பங்களித்த அனைத்து நாடுகளும் விசாரிக்கப் படும் நிலையை இலங்கையின் சிங்களத் தலைவர்கள் அனைவரும் ஏற்படுத்துவர். எனவேதான் எதுவித சர்வ தேச விசாரணையும் இடம் பெற முடியாத நிலை தொடருகிறது. த.தே.கூட்டமைப்பே விசாரணையைக் கோராது தட்டிக் கழித்து வருகிறது. அதற்காவே பலகோடி இலஞ்சம் பெற்ற சேதிகளும் வந்த படியே உள்ளன.

இப்படியான நிலையில் மக்களின் பிரதிநிதிகள் சர்வ தேச அரங்கில் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைச் சபையில் சர்வ தேச சட்ட அமுலாக்கத்தை வற்புறுத்த மறுக்கும்; நிலையில் நாம் எப்படி திரு விக்கினேஸ்வரனின் கருத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் ?

த.தே.கூட்டமைப்புத் தலைமை தமிழின அழிப்புப் போரை அமைதியாக பார்த்து இருந்தது போலவே இப்பொழுது சர்வ தேச போர்க் குற்ற விசாரணையும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்வதே தனது பிறவிப் பெரும் பயனாக நினைத்துச் செயற்படுகிறது.

அதனால்தான் இன்று அவரைத் தாமே கொண்டு வந்தோம் அவருக்காக உலகம் எங்கும் பணம் சேர்த்து அவரை வெற்றி பெறச் செய்தோம். ஆனால் நன்றி கெட்டத் தனமாக இன்று நம்மையே எதிர்த்து அரசியல் செய்வதன் மூலம் நமது முதுகிலே குத்தும் நம்பிக்கைத் துரோகி என சுமந்திரன் மாவை குழுவினர் வசை பாடித் தூற்றித் திரிகின்றனர சம்பந்தனோ வாயிலே உள்ள பாதாம்பருப்பை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திருடனுக்கு தேள் கொட்டியது போன்று தவிக்கிறார்.

ஆனால் தமது சிந்தனையில் மிகத் தெளிவாக உறுதியாக உள்ளார் என்பதை அவரின் பதிலில் உள்ள பின்வரும் வசனங்கள் பட்டவர்த்தனமாக அவர் மன நிலையைப் பிரதிபலிக்கின்றன.

கேள்வி சிங்கள அரசியல் மற்றும் மதத் தலைவர்களுடன் அண்மைக் காலமாக பல விடயங்கள் பற்றிப் பேசி வருகிறீர்கள். சில சமயங்களில் உங்கள் கருத்துகள் அந்த தலைவர்களை சினமடைய வைப்பவையாகக் காணப்படுகின்றன. எங்கே உங்களது கருத்துகள் சிங்களத் தலைவர்கள் தாம் தர விரும்பும் மிகக் குறைந்த அதிகாரங்களைக் கூடத் தற்போது தரவிடாமல் தடுத்து விடுமோ எனக் கவலைப் படுகிறார்கள். நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பதில்'' நாங்கள் ஒன்றை எமது மனதில் தெளிவாக வைத்திருக்க வேண்டும். ஐ.நா.வின் அதிகாரி பப்லோ டி

கிறீவ் போன்ற ஒருவர் இந்த விடயம் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்.
ஆனால் இதனை எமது தமிழ்த் தலமை ஏற்றுக்கொள்ள தவறிவிட்டதுதான் பரிதாபத்துக்கு உரிய விடயம். நான் நினைக்கிறேன் சிங்கள அரசியல் மற்றும் மதத் தலைமை தமிழருடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. அவர்களுக்கு அத்தகைய விருப்பம் இருந்தால் சர்வதேச அரங்குகளில் பகிரங்கமாக கொடுத்த வாக்குறுதிகளை இப்பொழுதாவது வழங்கியிருக்க வேண்டும்.

எடுத்துக் காட்டாக போர் முடிந்து 8 வருடங்கள் கடந்த பின்னரும் பயங்கரவாத தடைச் சட்டம் (தற்காலிக சரத்துகள்)சட்டம் நீக்கப்பட வில்லை.தமது வாக்குறுதிகளை கடைப்பிடிக்காத இவர்களிடம் எதை நீங்கள் எதிர்பார்க்க முடியும்? "

எனவே இவை எமது உரிமைகளின் போராட்டத்துக்கான விடயம். எவரும் மற்றவர்களுடன் அமைதி வழியில் சுயாதீனமாக பகிர்ந்து கொள்ள விரும்ப மாட்டார்கள். எனவே நாம் போரிடும் பொழுது சிங்கள மக்களின் உணர்வுகளுக்கு தேவையற்ற முக்கியத்துவம் கொடுப்பது எமது பலவீனத்தையே பிரதிபலிக்கும். (அவர்கள் எமது உரிமைகளைத் தருவார்கள் என்பதற்கான மிக குறைவான சாத்தியப்பாடுகள் இருந்தால் மட்டுமே நாம் அவை பற்றி கவனிக்க வேண்டும்).

நீங்கள் எப்படியான போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதே உங்களின் அடுத்த வினாவாக இருக்கும்?

முதலில் தமிழர்கள் ஒன்றிணைய வேண்டும். சுனாமியின் பொழுது விடுதலைப் புலிகள் இராணுவத்தோடு சகோதரர்கள் போல் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்தார்கள். அதாவது வடக்கு கிழக்கில் தொடர்ந்து வாழும் நிலைக்கு ஆபத்து ஏற்படும் பொழுது நாம் விழித்தெழுந்து ஒருங்கிணைய வேண்டும்.வடக்கு கிழக்கு மலையகம் கொழும்பு மற்றும் இலங்கையின் பிற இடங்களில் வாழுபவர்கள் கண்டிப்பாக ஒன்றிணைய வேண்டும். இக் கோரிக்கை சிங்கள சகோதரர்களுக்கு எதிரானது அல்ல. இப்பொழுது பிரிந்து கிடக்கும் தமிழ் மக்களுக்கு ஆதரவான சிந்தனை.

இரண்டாவதாக எமது புலம் பெயர் உறவுகளை எம்முடன் ஒத்துழைக்க கேட்க வேண்டும்.

மூன்றாவதாக தென்னிந்தியாவில் இருக்கும் எமது சகோதரர்களை எம் அனைவரையும் ஒன்றிணைக்க கைகொடுத்து உதவ வேண்டும். எப்படி யூத மக்கள் உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் தமக்குள் ஒற்றுமைக்கு பங்களித்தார்களோ அதைப் போன்று நாமும் இந்த ஒற்றுமை செயற்பாட்டில் இணைய வேண்டும்.நாம் எமது குரலை ஒற்றுமையாக எழுப்பினால் சர்வ தேச அரங்குகள் நாம் சொல்வதை கவனத்தில் எடுக்கும். அரசியல் ரீதியாக சர்வதேச அழுத்தம் அதிகரிக்கப்பட வேண்டும். சர்வதேச சட்டங்களின் கீழ் எமது உரிமைகளைப் பெற நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

அதே நேரத்தில் பௌத்த சிங்கள மக்களின் சம்மதத்துடன் ஒரு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் எமது உரிமைகளைப் பெறுவது தீர்வைப் பெறுவது வரவேற்கத் தக்கது.இப்படி இன்னும் பல விடயங்களை குறிப்பிட்டாலும், சிங்கள மக்களின் ஆதரவு என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும் என்பதே கள யதார்த்தம். எனவே அடுத்த கட்டமாக இருக்கப் போகும் அறிவு பூர்வமான தெரிவாக இருக்கக் கூடிய ஆட்சி முறை தனித் தமிழ் ஈழம் ஒன்றே தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வாகும் என்பதை உலகமே ஏற்க வேண்டிய நாள் வரும். அதுவரை அந்த நாளை நோக்கிய எமது அரசியல் வேலைத் திட்டங்கள் தொடர வேண்டும். (தேடல் தொடரும்)




SwissLife
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள்.உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஓரேயொரு நிறுவனம்...
















## அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்.

**Sägestrasse 79**
**3098 Köniz**

Telefon: 031 915 00 50
Telefax: 031 915 00 60
Handy: 079 889 60 65
eMail: Krishnasamy.Thileepan@swisslife-select.ch
Internet: www.swisslife-select.ch

மனோ



# பெரும்பான்மை சரி இல்லை! எவருக்குமே உரிமை இல்லை!

நிச்சயமாக இப்படி ஒரு தலைப்பு விநோதமானதுதான். ஆனால் அந்தத் தலைப்பு இக்கட்டுரை ஆசிரியருக்குச் சொந்தமானது அல்ல. அண்மைக் காலமாக நாம் இலங்கை ஊடகங்களில் கேள்விப் படும் சிங்கள ஊடகர் குஷால் பெரே ரா தமது கட்டுரை ஒன்றுக்கு வைத்துள்ள தலைப்பு. அவரது தலைப்பும் அவருடைய சரக்கும் நம் எல்லோருக்கும் தொடர்பு உள்ளதால் அவருடைய தலைப்பையும் சரக்கையும் அவற்றின் அவசியம் கருதி அகரம் வாசகருக்கு தரப்படுகிறது. ஏற்பதும் விடுவதும் அவர்களது உரிமை.

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் 106 மற்றும் ஐக்கிய மக்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளின் உறுப்பினர்கள் 40 பேரையும் கூட்டினால் வரும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்கள் தமக்கு வாக்களித்த வாக்காளரை நிராகரித்து விட்டனர். எனவே 2015 ஆகஸ்டில் மக்களால் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்றம் இனியும் மக்களின் பாராளு மன்றம் அல்ல. அது இப்பொழுது ஒரு ஊனமுள்ள அரசியல் ரீதியாக சட்டத்துக்கு விரோதமான பிரதிநிதித்துவம். அதற்கு மக்களை ஆட்சி செய்யும் தார்மீக உரிமையை இழந்து விட்டது.

அரசியல் சட்டவாக்க சபையாக ஒக்டோபர் 30ந்திகதி முதல் செயற் பட்ட பாராளுமன்றம் கடந்த நான்கு நாட்களில் எந்த அளவுக்கு புத்திக் குறைபாடும் சட்டம் இயற்றும் திறமை அற்றவர்கள் என்பதை ஒட்டு மொத்த உறுப்பினரும் மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்தி உள்ளனர். பாராளுமன்றம் அரசமைப்புச் சபையாகவோ அல்லாமலோ எந்த ஒரு அரசமைப்புச் சட்டத்தையும் ஆக்க. மாற்ற பதில் சட்டம் செய்ய அல்லது இருக்கும் அரசமைப்புச் சட்டத்தை மாற்றும் சட்டம் இயற்றும் தகுதி அற்றவர் என்பதையும் அது உறுதி செய்கிறது.

தேர்தல் வாக்குறுதியாக இல்லாது விட்டாலும் பாராளுமன்றம் அரசமைப்புச் சட்டத்தை மாற்ற முடியும் என்ற ஜே.வி.பி.உறுப்பினர் அநுர குமார திசாநாயக்காவின் கற்பிதமான வாதம் தார்மீகம் மற்றும் அரசியல் அடிப்படையில் தவறானது. அரசியல் படியாகப் பார்த்தால் அரசியல் கட்சிகள் தேர்தல் வாக்குறுதியாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக சொன்னதை மீறி அதே வாதத்தின் அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்து வைத்திருப்பதை நியாயப் படுத்த முடியும்.

அநுர குமார திசா நாயக்காவின் வாதத்தின் அடிப்படையில் பாராளுமன்றம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவோ அல்லது நீக்காமலோ முடிவு செய்யலாம். தனது பாராளு மன்றத்துக்குப் பிரதிநதியாக தெரிவு செய்யும் ஒரு இறைமை கொண்ட மக்களின் சபை தனது அரசியல் மற்றும் தார்மீகப் பொறுப்புகளை சமுதாயத்துக்கு ஆற்றுவதுதான் சரியானது.

ஆகவே பாராளுமன்றம் ஒரு சட்ட பூர்வமான சபையாக இருக்க வேண்டுமானால் அது கண்டிப்பாக மக்களின் தெரிவுகளை பிரதிநிதிப் படுத்த வேண்டும்.2015 ஆண்டு

தேர்தலில் மக்களின் விருப்பம் என்ன?

மகிந்த ராஜபக்ஷ அணியின் ஜனாதிபதி சிறிசேனாவின் தேர்தல் பிரச்சாரத்துக்கு எதிராக முன்னெடுத்த மிகக் குரூரமான தடைகளை எதிர்த்து போட்டியிட்டார். அவர்கள் 95 உறுப்பினர்களுடன் ஐ.தே.கட்சியைத் தோற்கடித்து தென் மாநிலங்களில் 47 இலட்சம் வாக்குகளப் பெற்று பாராளு மன்றத்தில் இடம் பிடித்தனர்.

ஐ.தே.க. எதிர்ப்புச் சிங்கள ஸ்ரீ.ல.சு.க. வாக்குகளால் ஐ.தே.க. யைக் கூட மகிந்தரின் அணி தோற்கடித்தது. மகிந்தர் அணியில் வெற்றி பெற்ற உறுப்பினர்களும் ஐ.தே.க. அரசின் பங்காளிகளாக உள்ளனர். எனவே ஐ.தே.க. எதிராக வாக்களித்த 47 இலட்சம் மக்கள் ஐ.தே. கட்சியுடன் செயற்படும் ம.சு.க. உறுப்பினருக்கும் தமது ஆணையை வழங்கவில்லை. வழிகாட்டுக் குழுவின் விவாதத்தின் பொழுது நவம்பர் 02ந் திகதி பேசும் பொழுது " எனது தலைமையில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 40க்கு மேற்பட்ட பா.உ.கள் இந்த அரசில் அரச பதவிகளை வைத்திருக்கின்றனர். அவர்கள் அனைவருமே 47 இலட்சம் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை முற்றிலுமாக புறக்கணித்தும் அவர்களின் விருப்பத்தை கைவிட்டும் உள்ளனர்.

ஐ.தே.க. வாக்குகளான 51 இலட்சம் பேர்களில் பெரும்பாலான வாக்காளர்கள் ஒரு சுத்தமான ஐ.தே.க. ஆட்சியை விரும்பினார்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு ஊழல் அற்ற முந்தைய ராஜபக்ஷ ஆட்சியில் இடம் பெற்ற ஊழல்வாதிகள் சட்டப்படி தண்டிக்கப் படுவதை விரும்பினார்கள்.

ஆனால் ஐ.தே.க. தலைமை மகிந்த ஆடசியில் அறியப்பட்ட குற்றவாளிகளை அங்கீகரித்தும் தானும் அதே விதமான மாபெரும் ஊழல் ஆட்சியை வாக்களித்த மக்களின் ஆணைக்கு எதிராக செயற்பட்டு வருகிறது. எல்லாமாக ஐ.தே.க. உறுபடபினர் 106 பேர், மகிந்த அணியின் 40 உறுப்பினர் என்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையினர் தமக்கு வாக்களித்த வாக்காளரின் ஆணையை நிராகரித்து விட்டனர்

எனவே இந்தப் பாராளுமன்றம் 2015 ஆகஸ்டு தேர்தலில்

லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக்கடை
ASI Boucherie
PARIS-FRANCE

வாடிக்கையளர்கள் அதிகம் ஆனதால் தினமும் புதிய இறைச்சிகள்
தமிழ் வாசம் வீசும் ஐரோப்பிய இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக்கடையின் இறைச்சிக்கறி வாசமும்
ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்.
சுவையான இறைச்சி உண்பதற்காக, ஆசி இறைச்சிக்கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்!
அன்பான வரவேற்பு! தினமும் புதிய இறைச்சி வகைகளே விற்கப்படுகின்றது.
இது எப்படி சாத்தியமாகின்றது? தரமான இறைச்சியே விற்கப்படுவதால் வாடிக்கையாளர்களோ அதிகம்.
வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்
ஆடு முழுதாகவோ அல்லது அரையாகவோ கிலோ 4,20€
தினமும் ஆட்டுப்பங்கு
195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

மக்களால் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்றம் அல்ல. எனவே பா.உ. சுமந்திரன் வைத்து வாதாடும் காரணங்கள் எவையும் இந்தப் பாராளு மன்றத்துக்கு ஏற்புடையன ஆகாது.

இதுதான் முக்கிய காரணமாக உள்ள நிலையில் இவர்களிடம் புதிய அரசமைப்பை உருவாக்கும் மிகப் பெரிய பொறுப்பை ஏற்கும் நம்பிக்கை நாணயம் இங்குள்ள ஆண் பெண் உறுப்பினர்களிடம் இல்லை என்பதற்கான வேறு பல விடயங்களும் இல்லை என்பதால் இவர்கள் இச்சட்டத்தை இயற்ற முடியாது இயற்றவும் கூடாது.

இதே மகிந்தர் தரப்பு இந்த அரசமைப்பு தமிழ் அரசியல் வாதிகளுக்கு வாய்ப்பாக சமஸ்டி அமைப்புக்கும் அதன் மூலம் நாட்டின் பிரிவினைக்கும் வழி செய்துவிடும். இதனால் தமிழ் மக்கள் பயன் அடைய மாட்டார்கள்.

எந்த விதமான தொலை நோக்கும் கொள்கையும் இல்லாத பிரிவனை வாதம்,நிறைந்த வாதங்களால் நெளிந்தும் வளைந்தும் அவதிப் படும் இந்தப் பாராளு மன்றம் ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தை வரைந்து அதனை சட்டமாக்கவும் அனுமதிக்கப்பட வேண்டுமா? ஆதனை நான் ஒரு காட்டுத் தீயைப் போன்று ஆபத்தானது.

இத்தகைய ஒரு செயலற்ற மானங் கெட்ட பாராளு மன்றத்தை ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதை விட புதிய அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற மக்களிடமே விட்டு விடலாம்.

பெரும்பான்மை சரியாக இல்லை எவருக்குமே தார்மீக உரிமையும் இல்லை என்பதை இதை விட வேறு எப்படிச் சிறப்பாகச் சொல்ல முடியும்?

இப்படிச் சொல்லும் பொழுது சம்பந்தன் சுமந்திரன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டும் எப்படி தமிழ் மக்களை பிரதி நிதிப் படுத்தவும் சட்டம் இயற்றவும் அனுமதிப்பதா வேண்டாமா என்ற கேள்விக்கு தமிழ் மக்கள் தேடும் காலமும் வந்துவிட்டதா?




Lyca TV

# பேராதரவில் புத்தாண்டும் புது நிமிர்வும் 2018

ஒருவருட இணைப்புச் சந்தா

CHF 89

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்

CHF 64

14 மாதங்கள்



## நிகழ்வினை கண்டுகளிப்பதற்கான அரிய வாய்ப்பு

இன்றே LycaTV ஐ வாங்கி 20 CHF BON பெறுமதியான நுழைவுச் சீட்டுக்களை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் தமிழ்

1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்



SALES
077 955 9430

CUSTOMER SERVICE
044 555 2320

www.lycatv.tv

பாகம் 6

# அவனா? இவன்!




யாழ்ப் பாணக் குடாநாடு வரண்ட பிரதேசமாகவும் முன்னர் மக்களால் குடியேறப் படாத பகுதியாகவும் இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கருதி வந்துள்ளனர். ஆனால் 1970 களில் நடைபெற்ற இலங்கைத் தொல்லியல் அகழாய்வுகள் ஆனைக் கோட்டை சுன்னாகம் கந்தரோடைப் பகுதிகளில் செய்த அகழாய்வுகளில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மனிதக் குடியிருப்புகள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளமையால் அப்பகுதி யாழ்ப்பாடியான அந்தகனின் வருகைக்கு முன்னரே மக்கள் குடியேற்றங்கள் இருந்தமைக்கான ஆதாரங்களை கொண்டிருந்தன என்பது தெரியவருகிறது.



வழுக்கை ஆற்று பழந் தமிழ் எழுத்து படிவம்

மேலும் வழுக்கை யாற்றுப் படுகையில் கிடைக்கப் பெற்ற மட்பாண்ட சிதைவுகளில் சிந்து வெளி நாகரிக காலத்து முற்பட்ட தமிழ் பிராமி எழுத்துகள் கிடைத்தமை கவனத்தில் கொள்ள வேண்டி உள்ளது. இவை எல்லாம் இன்றும் சிங்களம் பிரச்சாரப் படுத்தி வரும் செய்தியான யாழ்ப்பாண தமிழரின் அரசு கி.பி 13ம் நூற்றாண்டுக்குப் பின்னர் உருவான என்ற பிரச்சாரம் அடிப்படை ஆதாரம் இல்லாத அப்பட்டமான பொய்களில் ஒன்றுதான் என்பதை அறியமுடிகிறது.

மாவிட்ட புரம் கந்த சுவாமி கோயில் வரலாறும் மாருதப் புரவீக வல்லியின் வரவும் அவரோடு 18 வகைச் சாதியினரும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு குடியமர்த்தப் பட்டனர் என்ற வரலாற்றுப் பதிவின் மூலம் அறிய முடிகிறது. மாவிட்ட புர கோயில் கட்டப்படு முன்னரே பாண்டிய அரச குமாரியான மாருதப் புரவீக வல்லி கீரிமலையில் நகுலேஸ்வரம் கோவிலை வணங்கி நீராடி கீரி முகம் எனப்படும் நோய் நீங்கப் பட்ட பின்னரே மாவிட்ட புரம் கோயிலை யும் அதனோடு ஏழு விநாயகர் ஆலயங்களையும் யாழ்ப்பாணக் கிராமங்களில் கட்டினார் என்ற செய்திகளும் உள்ளன. எனவே அக்காலம் முதலாக தென்னிந்தியாவில் இருந்து வந்து குடியேறிய மக்களும் யாழ் குடா நாட்டின் வட பகுதிகளில் இருந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

அநுராத புரம் பகுதியில் இருந்து இந்தியப் பரடையெடுப்புகளால் இடம் பெயர்ந்து வந்த வன்னிப் பகுதி வன்னிய மக்கள் பெரும்பாலும் யாழ் குடாநாட்டின் வடக்கு மேற்குப் பகுதிகளில் குடியேறினர் என்பதை முந்தைய பதிவில் கண்டோம். ஆனால் மாருதப் புரவீக வல்லியும் மாவிட்ட புரம் கோயிலும் தென்னிந்தியத் தமிழரின் வருகையை ஊக்குவித்தன எனலாம். அப்படிச் சுயமாக மக்களின் போக்கு வரத்து பாக்கு நீரணைக்கு இரு கரைகளிலும் மிகச் சாதாரண விடயமாக இடம் பெற்றதை 1960ம் ஆண்டு வரை காண முடிந்தது.

அப்படி சுயமாகக் குடியேறிய மக்களை வடமராட்சி கரை தொடக்கம் சுழிபுரம் காரைநகர் வரை உள்ள மக்களின் நிறம் உடலமைப்பு என்பவற்றை வைத்து தென்னிந்தியக் கரைகளான நாக பட்டினம் காரைக் கால் தொடக்கம் இராமநாத புரம் கேரளப் பகுதி கொல்லம்

கள்ளிக் கேட்டை தூத்துக்குடி துறைமுகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களை ஒத்தும் இருப்பதைக் காணலாம்.

இதற்கு முக்கிய ஆதாரமாக கீரிமலைக்கு தெற்கே இரண்டு மைல் தொலைவில் கொல்லம் கலட்டி என்ற கிராமம் இன்றும் உள்ளது. இப்படி ஒரு பெயருடன் ஒரு கிராமம் இப்பகுதியில் அழைக்கப்டுவது மிக விசித்திரமான ஒன்றாக அவன் மனதில் பட்டது. அவன் சிறுவனாக இருந்த பொழுது அவனது கிராமத்தில் உள்ள குடும்பத்தில் ஒரு முதியவர் தூத்துக் குடிவரை கடல் வணிகம் நடத்தி வந்தார் அங்கிருந்து படகுகள் தோணிகள் மூலம் இந்தியப் ஆடைகள் பெரிய வெள்ளை மயிலை நிற எருதுகள் அரிசி போன்ற உணவுப் பொருட்களையும் கொண்டு வந்து வியாபாரம் செய்வார்.

அவரோடு அவரைப் போல் பல கடத்தல் வியாபாரிகள் குறிப்பாக 2ம் உலகப் போர்க் காலத்தில் அப்பகுதியில் இருந்தனர். அப்படியான ஒரு சமயம் அவனது தந்தையார் கடத்தப் பட்ட இந்திய அரிசி வாங்குவதற்காக ஒருநள்ளிரவில் மாட்டு வண்டியில் விளக்குகள் இல்லாமல் முன்னிரவு நிலவு ஒளியை மட்டுமே நம்பி அயல் கிராமம் சென்று அரிசி வாங்கிய நிகழ்வு இடம் பெற்றது.

அது போர்க் காலம் என்பதால் உணவுத் தட்டுப்பாடும் கூப்பன் முறையில் உணவுப் பொருட்கள் விநியோகம் அறிமுகமான நாட்கள். 10 பேர் உள்ள குடும்பம் என்பதால் இப்படியான கடத்தல் அரிசி வியாபாரிகளின் தயவில் மக்கள் உயிர் வாழ வேண்டிய நிலை. ஏதும் கல்யாணம் கருமாதி என்றாலும் இப்படிக் கிடைக்கும் பண்டங்கள்தான் ஒரே தீர்வு. அதனால் அந்த ஒரு கொள்வனவு அவனது குழந்தை மனதில் ஆழப் பதிந்த நிகழ்வாகும்.

அவன் வளர்ந்து 20 வயதாகி கொழும்பில் வேலைக்கு செல்லும் வரை கொல்லங் கலட்டி என்றால் கொல்லர்களின் கிராமம் என்ற புரிதலே பலரிடம் நிலவியது. அவன் தனது கிராமத்தின் பெயரைச் சொன்னதும் நீ என்ன கொல்லனா? என்ற கேள்விக்குப் பதில் சொல்லும் நிலைக்கு ஆளானான். ஆனால் உண்மையில் அவனது கிராமத்தில் ஒரு கொல்லர் குடியைக் கூட காண முடியாது.

மாருதப் புரவீக வல்லியுடன் 18 சாதி மக்களையும் கொண்டு வந்து அப்பகுதியில் குடியமர்த்தினாள் எனப் படித்திருந்தான். எனவே அதன் காரணமாக கொல்லன் கலட்டி என அக்கிராமம் பெயர் பெற்றிருக்கலாம் என ஆறுதல் அடைந்தான்.

ஆனால் அவன் தொழில் புரிந்த பணிமனைக்கு அருகாமையில் கள்ளிக் கோட்டையைச் சேர்ந்த ஒரு வியாபாரியும் அவனுடன் பணியாற்றிய இந்திய வம்சாவளி மக்களுடனும் பழகிய பின்னர்தான் அவனது கிராமம் கொல்லம் கலட்டி என்ற கேரளத்தில் உள்ள இரு கிராமங்களின்; பெயர் என்பதைத் தெரிந்து கொண்டான். அந்த இரு கிராமங்களில் இருந்தும் முன்னொரு காலத்தில் இடம் பெயர்ந்த மக்கள் தமது ஊர்களின் பெயரால் புதிதாகக் குடியேறிய இடத்தை அழைத்ததால் கொல்லம்கலட்டி என்ற புதுக் கிராமம் தோன்றியத என முடிவு கட்டினான்.

மக்கள் இடம்பெயரும் பொழுது தமது ஊரையும் பேரையும் தம்மோடு எடுத்துப் போவதை வரலாறு பல தரவுகளை கொண்டிருப்பதைக் காண்கிறோம். தொல்காப்பிய பாயிரம் கூறும் தென் குமரி இன்றைய கன்னிய குமரி எனத் தவறாக பேசப்படுவதைக் காண்கிறோம் தென் குமரி என்பதே தெற்கே இருந்த குமரி என ஏன் பொருள் கொள்ளக் கூடாது? கடல் விழுங்கிய குமரிக் கண்டத்தின் தேன் கோடியை தென் குமரி என அழைத்திருக்கலாம் என்ற ஐயம் ஏனில்லை?

தென் மதுரை அங்கே இன்று மதுற மாத்தற எனச் சிங்களப் பெயரில் இருக்கிறது. தமிழ் நாட்டில் ஒரு மதுரையும் வடநாட்டில் ஒரு மதுரையும் தாய்லாந்தில் ஒரு மதுரையுமாக தென் மதுரைத் தமிழர் போன இடமெல்லாம் மதுரை. அது போன்று தென்னிலங்கை பாணதுறையில் ஒரு நல்லூர் வட இலங்கையில் பூநகரியிலும் யாழ்ப்பாணத்திலும் நல்லூர்கள் தமிழகத்தில் பந்த நல்லூர். இதே போன்று வவுனியாவில் மாங்குளம் தமிழகம் மதுரை மாவட்டத்தில் மாங்குளம் என ஊர்கள் இருப்பதை காண்கிறோம். இவையெல்லாம் இடம் பெயர்ந்த மக்களால் மக்களால் விட்டுச் செல்லப்பட்ட குடிபெயர்வுகளின் வரலாற்று எச்சங்களாகவே பார்க்கப் பட வேண்டும். அவனும் அப்படித்தான் பார்க்கிறான். தான் பார்த்ததை இங்கே பதிவு செய்தும் வைக்கிறான். (அவன் வருவான்).

ஜேர்மனியில் தரம், உத்தரவாத்துடன் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழ்ர் நிறுவனம்.

**R. Ragunathan**
Parkhof Str. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81

ஆசியா சமுத்திரம்
Sittard Str. 21
41061 Mönchengladbach
Tel: 02161 9028388
Fax: 02161 9028399

TJB BROTHERS

SUN TV மற்றும் VIJAY TVயின் விநியோகிஸ்தர்

எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

Bank Details: R.Ragunathan
IBAN: DE55 3907 0024 0474 1153 00 | BIC: DEUT DE DB 390

உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கான
ஒரே இடம்

044 803 47 47
078 300 90 90




- Airport Transfer
- VIP Service
- Limousine
- Reisebusse
- Kleinbusse
- Gruppen-Transfer

SWISS RENT A CAR
SRAC

**Swiss Rent a Car GmbH**
Schaffhauserstrasse 137
8302 Kloten

www.swissrentacar.ch




அனைத்து வாகனத் திருத்த
வேலைகளுக்குமான ஒரே இடம்

Reifenwechsel
Auto Diagnostik
Karosserie
Klimaservice

MFK Bereitstellung
Bremse und Stossstange
Autoradio Montage
Reinigung und Polieren
Sonstige Reparaturen
Ersatzwagen

KGS

Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02




ஏலையா க.முருகதாசன்



# பணம் ஏன் பெறுமதியற்றது?

பணம் பெறுமதியற்றது என்பது பலருக்கு அதிர்ச்சியைத் தரலாம்.அது ஒரு ஊடகம் போன்றுதான் செயல்படுகிறதே தவிர அது பெறுமதியற்றதேதான். பணம் என்றால் என்ன?.பண்டமாற்று வர்த்தகத்தின் பரிணாமே பணத்தின் வரவாகும்.இது வர்த்தக உலகத்தினால் இலகுவழிக் கையாளுதல் ஆகும்.

பணம் தேவையானது ஆனால் பெறுமதியற்றது.உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோர்,வாங்குவோர் என்ற முக்கோண வடிவத்திற்குள் உலக மக்கள் இணைக்கப்பட்டுள்ளனர். மக்கள் வாங்கும் பொருள்களுக்கு கொடுக்கும் பணத்திற்கு எவ்வித சமநிலையும் அற்றவையே பொருட்களாகும். ஊன்றிக் கவனித்தால் பணத்திற்கும் வாங்கும் பொருட்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது.ஏனெ;றால் இரண்டும் ஒன்றல்ல.

ஒவ்வொரு நாடும் தமக்குரிய பணத்தினை தாள்களாகவும் உலோகத்திலும் பிளாஸ்டிக்கிலும் தயாரித்து வைத்து அதனை மக்கள் மத்தியில் புழக்கத்தில் விட்டுள்ளன. இது ஒரு ஊடகமாகச் செயல்படுகிறதே தவிர பெறுமதியற்ற நிலைகொண்டு தேவைக்காக பயன்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் பல ஐரோப்பிய நாடுகளின் இணைவு ஆதலால் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் யூரோ என்ற பணம் புழக்கத்தில் இருந்து வருகின்றது.இது தேவையானது மட்டுமே தவிர பெறுமதியற்றது. உலகம் ஒரு வளர்ச்சியை எட்டிக் கொண்டிருக்கையில் உலகம் உலக மக்களுடனான பரப்பளவெங்கும் விரவி தொடர்பினை வேகமாக ஏற்படுத்திக் கொண்டது.

ஒரு பொருளின் உற்பத்திக்கு செலவிடப்படும் மூலகங்கள், தேவைப்படும் இயந்திரங்கள், மனிதவளம், மின்சாரம்



போன்றவற்றினையும் தமக்கான உழைப்பினையும் வைத்தே பொருளின் விலை நிர்ணயிக்கப்படுகின்றன. உலக நிதிப் புழங்களினாலும், பொருளாதார கட்டமைப்புகளினாலும் பணம் முக்கியமானதாகத் தோற்றப்பட்டாலும ;.இன்றை நவீன வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்த அனைத்து மனித வள உழைப்பின் பயனாகவே இன்று பல நவீன இயங்திரங்களைக் உருவாக்க முடிந்தது.ஒரு தொழிற்சாலையில் இருக்கும் நவீன இயந்திரம் உற்பத்தி செய்து வரும் பொருளை ஆரம்பத்தில் எந்த இயந்திரம் உற்பத்தி செய்தது என்றும் அதற்கு முன்னோடியான இயந்திரம் எது என்றும் அதற்கு முன்னோடியான இயந்திரம் என்பதும் தேட வேண்டிய தேடலாகும்.

மிகத் தெளிவாக தேடலால் விடையாகக் கிடைப்பது.பொருள் உற்பத்திக்கும் பணத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதேயாகும். பலதரப்பட்ட வளர்ச்சிகளான, விவசாய உற்பத்தி,அணு உற்பத்தி, கணிணித்துறை,கட்டிடத்துறை என பன்முக வளர்ச்சிகளின் ஆர்மபம் என்பது மனித வள முயற்சிகளே.

கணிணி கண்டுபிடிக்காத காலத்திலும் மக்கள் இருந்தார்கள், வாழ்ந்தார்கள். கணிணி மக்களைப் பிறப்பிக்கவில்லை.மக்கள்தான் கணிணியை உருவாக்கினார்கள். கணிணி இல்லாத உலகத்திலும், இன்று கைத்தொலைபேசி இல்லையென்றால்; நாளே போகுது இல்லையே என்று பதைபதைக்கும் மனதர்கள் நாளை இவை எதுவும் இல்லாத எதிர்காலம் தோன்றினாலும் எதுவுமில்லாமலும் மனிதர்கள் வாழ்வார்கள்.

பணத்தையும் மனிதர்களே உருவாக்கினார்கள். மனிதர்களால் உருவாக்கப்பட்ட எந்தப் பொருளாக இருந்தாலும் அது தேவைக்குரிய பொருளே தவிர பெறுமதியான பொருள் அல்ல.அது போலவே மனிதனால் உருவாக்கப்பட்ட பணம் தேவைப்படும் பொருளே அன்றி பெறுமதியற்றது என்பதே உண்மையாகும்.

விவசாயம் தொட்டு இன்றைய தேவைக்காக பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும் பணம் என்ற போலி உருவத்தால் ஈடு செய்வதாக மாயத் தோற்றத்தை மக்கள் கொண்டுள்ளார்கள். ஒரு இயந்திரம் என்பது உதிரிப்பாகங்களினால் உருவாக்கப்படுபவையே. உதாரணமாக ஒரு இயந்திரத்தில் 600 உதிரிப்பாகங்கள் இருக்கின்றன என வைத்துக் கொண்டால் அந்த உதிரிப்பாகங்களை உருவாக்குவதில் பணத்திற்கும் உதிரிப்பாகங்களுக்கம் எவ்வித சம்பந்தமுமே கிடையாது.

உதிரிப் பாகங்களுக்கு தேவையான உலோகங்களுக்கும் பணத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.



# உளம் திறக்கும் உண்மைகள்..

"உளம் திறக்கும் உண்மைகள்..." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய
சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.
AKARAM - PO BOX 4153, 59037 Hamm - Germany - eMail: editor@akram.eu



## தியாகம்

தியாகம் என்பது
தீண்டப்படாத பொருளோ..?
இப்போதெல்லாம் தமிழர்கள்
தீண்டுவதேயில்லையே..!

## மனிதர்கள்

இயற்கை எனும் விந்தைக்குள்
கைதான சிந்தனைப்
பறவைகள்.



## இறந்த வீடு

நாம் செத்துக்கொண்டிருக்கிறோம்
என்று தெரியாமல்
செத்தவருக்காக அழும் நாளைய
பிணங்கள்



## நீதி

சட்டத்தை பார்ப்பவர் நீதிபதி
அதில் உள்ள ஓட்டையை
பார்ப்பவர் வக்கீல்
ஆனால் யாருமே
பார்க்கவில்லை நீதியை



## மழை

வானம் வன்முறை செய்தது
இடி கோஷம் போட்டது
மின்னல் மிரட்டல் விட்டது
மழை பயத்தில் அழுதே விட்டது.



## மனிதநேயம்

மனித நேயம், மனிதநேயம்
எனப் பார்த்து
மனிதத்தை புதைக்கும் மனிதர்
மனிதம் தான்
பேணுவாரோ?



## இரக்க குணம்

என்று சொல்லி
இரந்துண்ணும்
வாழ்வு
சமூக வரவில்
சமஸ்தானம் தேடுது



## எப்போ?

ஈழத் தமிழன் நிலை
ஈழத்திலும் புலத்திலும்
இப்படித்தான் உள்ளது !.
இராணுவச் சிறையில்
உள்ள உறவுகளை மீட்டு
விடுதலை கொடுப்பது
எப்போ ?

ஆக்கம்: கருமி
தமிழ்விழி
கெங்கா ஸ்ரான்லி

விளம்பரத்
தொடர்புகளுக்கு:
0049 17647118711

www.akaram.eu




# Gopara Gnanam

Textiles & Jewellery Shop

**Rheinische Straße 81, 44137 Dortmund**

**Telephone: 0231 5450028 | Mobile: 0171 33 06 542**



தேவன்

# சிரியாவைத் தீயிட்டது யார்...?

சிரியாவில் வெடித்த போரின் அடிப்படைக் காரணங்களை சர்வதேச ஊடகங்கள் ஆராய்ந்தறிய முன்னமேயே, வடகொரியப் போர், கத்தார் மீதான பொருளாதாரத்தடை, ஈரானிய அணுவாயுத விவகாரம் ஆகியனவற்றையும் சமவேளையில் வெளிக்கொணர்ந்தது அமெரிக்கா. இதை முற்றுமுழுதாக ஊடகங்களைத் திசைதிருப்பும் முயற்சியாகக் கொள்ளமுடியாவிடினும், இந்தச் செய்திகளின் பிரபல்யத்தன்மையானது சிரியாவின் மீதான அமெரிக்க இரசிய உரசலில் உச்சத்தை வெளித்தோன்றவிடாது மூடிவைத்திருந்தது எனலாம்.

இதற்கு முதற்காரணமாக அதி உச்ச நிலையில் இருக்கும் ஊடகங்களின் மீதான எதிர்க்கேள்வி மக்களுக்குத் தோன்றுவதில்லை என்பதே. BBC அல்லது CNN ஆகிய ஊடகங்களின் செய்தியை மறுபரிசீலனை செய்யவிரும்பாத, அல்லது அதை மறுக்காத மக்கள்கூட்டமே இன்று உலகில் 70 சதவீதமானவர்களாக இருக்கிறார்கள். எவ்வளவோ சமயோசிதமாக செய்திகளை, சாதாரணமாக மக்களிடம் நுழைத்துவிடுவதில் இந்த ஊடகங்களுக்கு நிகரேதுமில்லை.

உண்மையில் சிரியாவில் அல் அசாத் ஆட்சியின் மீது அதிகப்படியான வெறுப்பேற்பட அமெரிக்க கொண்டிருந்த காரணங்கள் என்ன என்றெல்லாம் அலசவே தேவையில்லை. அசாத்திற்கு எதிராக முதன் முதலில் நடாத்தப்பட்ட கண்டனப் பேரணியானது சில நூறுக்கும் அதிகமான மக்களையே கொண்டிருந்தது. இந்தப் பேரணி நடைபெற்று ஒரு சிலமாதங்கள் கழிந்த நிலையில், ஏப்ரல் 6, 2017 அன்று 59 தடவைகள் இரசாயனக் குண்டுவீச்சினை நடாத்தியது அமெரிக்கா. அதற்கு காரணமாக அல் அசாத் படைகள் இத்லிப் என்ற இடத்தில் பொதுமக்கள் மீது நடாத்திய குண்டுத்தாக்குதலை முற்காரணம் காட்டியது. ஆனால் அமெரிக்காவின் தாக்குதலைப் பற்றி அசாத் எந்தவித அறிக்கையையும் வெளியிடவில்லை. இதுவே ஊடகங்களின் நம்பகத்தன்மை மீது ஏற்பட்ட முதற்கேள்விக்குறி.

இதேபோல 2013 ஆம் ஆண்டு சிரியாவின் கௌதா என்ற இடத்திலும் இரசாயனத் தாக்குதலை அமெரிக்கா மேற்கொண்டது, அதற்கு ஆசாத் திற்குத் துணையான, ஆனால் ISIS பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் என்று பெயர்சூட்டிக்கொண்ட அமெரிக்கா, அதன் பின் தாக்குதல் தொடர்பான எதுவித செய்திகளையும் வெளியிடவில்லை.

சியா மற்றும் சுன்னித் என்ற இசுலாமிய இருபெரும்பிரிவுகளில் 74 வீத மக்கள் சுன்னி என்ற பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் அசாத்தை எதிர்ப்பவர்கள். காரணம் அசாத் சியா என்ற பிரிவைச் சேர்ந்தவர். நீண்டகாலமாக அசாத் குடும்ப வழிவந்தவர்களே சிரியாவை ஆண்டு வருகிறார்கள். அவர்கள் அனைவரும் பின்னணியில் இரசிய ஆதரவாளர்கள். அதற்குப் பிரதியுபகாரமாக , வளைகுடாவில் இருந்து இரசியா செல்லும் எண்ணைக் குழாயை சிரியா ஊடாகச் செல்ல அனுமதித்தனர் அசாத் அரச குடும்பத்தினர். நீண்ட காலமாக அமெரிக்காவின் கோபத்திற்கு இவர்கள் காரணமாக இதுவே அடிப்படை. ஏதோ ஒரு வழியில் போக்கு காட்டி, இவர்களை வளைத்துவிட முடியும் என எண்ணிய அமெரிக்காவின் தந்திரம் இங்கே பலிக்கவில்லை.

முதலில் அசாத்திற்கு எதிராக சுன்னி இசுலாமியர்களைத் தூண்டி விட்டது அமெரிக்கா. மார்ச் மாதம் 2011 ஆம் ஆண்டு டெரா என்ற இடத்திலேயே அரசாங்கத்திற்கு எதிரான முதல் கிளர்ச்சி உருவாகியது என்பதைவிடவும் உருவாக்கப்பட்டது என்று சொல்வதே சாலப்பொருத்தமானது. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், அசாத்திற்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பமான மறுநொடியிலேயே டுடு அசாத் வெளியேற வேண்டும்டுடு என்ற கோரிக்கையை வெள்ளை

மாளிகை வெளியிட்டதுதான். ஆதலால் கிளர்ச்சிக்கு யார் காரணம் என்பதை இரசியா உடனடியாகப் புரிந்துகொண்டது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களோடு அல் கைதா மற்றும் வேறு சில ஆயுதக்குழுக்களும் இறக்கிவிடப்பட்டன. அமெரிக்காவின் நேரடிப் பயிற்சியில் தரையிறக்கப்பட்ட அல்கைதா குழுவினரே மோதல்களின் அடிப்படை என விளாடிமிர் புட்டின் வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார்.

அதில் உண்மை இருக்கக்கூடும். காரணம், ஆப்கானிசுத்தான் நாட்டில் ஐளுஐளு என்ற அதிபயங்கர தீவிரவாதக்குழுவை இயக்கியதும், பின்னர் அவர்களைக் குற்றம் சாட்டியபடி அங்கே தரையிறங்கியதும் அமெரிக்காவின் அதே போக்கிரித்தனமே. இரசியாவின் தலையீடு எள்ளளவும் ஆப்கானிசுத்தானில் இருக்கக்கூடாது என்பதே அமெரிக்காவின் இன்றைய வெளியுறவுக் கொள்கையின் வெளிப்படையான உண்மை.

இது ஒருபுறம் இருக்க, தனது எண்ணெய்ப் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை அடிப்படையாக வைத்து ஈரானுடன் கைகோர்த்தபடி இரசியா அல் அசாத்திற்கு மறைமுக உதைவிகளைச் செய்தது. ஈரான் ஆயுதங்களை வகைதொகையின்றி அள்ளிக்கொடுக்க, இரசியா முண்டுகொடுக்க அல் அசாத் ஆதரவாளர்கள் இப்போது மீண்டும் பலமாகவே இருக்கிறார்கள்.


ஆப்கானிசுத்தானில் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்துகொண்ட இரசியா, சிரியாவில் முந்திக்கொண்டது என்றே சொல்லவேண்டும். அசாத் வெளியேற வேண்டுமெனவும், அசாத் அரசு அல் கைதா உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதாகவும் வெள்ளை மாளிகை அறிவித்த மறுநாள், இரசியா தனது முதல் விமானத்தாக்குதலை சிரியாவில் நடாத்தியது. உனது குருட்டாட்டத்தை நான் புரிந்துகொண்டேன் என அமெரிக்காவிற்கு இரசியா காட்டிய சிவப்பு அட்டையே அதுவாகும். இங்கே இரசியா முந்தியிருக்காவிடின், ஆப்கானிசுத்தான் போலவே சிரியாவிலும் முற்றுமுழுதாக அமெரிக்கப் படைகள் காலூன்றியிருக்கும்.

ஆனால் எதுவித ஊடகங்களுமே இந்த அடிப்படை உண்மையை வெளிக்கொணரவேயில்லை. கனடாவைச் சேர்ந்த ஒரு வரையறைகள் அற்ற ஒரு ஊடகவியலாளரே இந்த உண்மையை வெளிக்கொண்டுவந்துள்ளார். ஒருவரியில் சொல்வதானால், சிரியாவினூடாக இரசியா வருகின்ற எண்ணைக்குழாய்களைத் தடைசெய்வதற்காக அமெரிக்காவும், அதைத் தடுத்து தனது மேலாண்மையை நிலைநாட்ட இரசியாவும் தமது பலத்தைப் பரிசோதிக்கும் இடமே சிரியா ஆகும்.

ஆனால், இந்தப் போரின் உதிரி விளைவுகள் மிகமோசமானவை. ஏராளமான அகதிகள் ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கி நகர்ந்துவருவதனூடாக, ஐரோப்பாவின் நிலையைச் சற்றுத் தளம்பச் செய்யும் இரசியாவின் நீண்டகாலக் கனவும் இங்கே பலிக்கிறது. ஏறக்குறைய 158, 637 அகதிகளை யேர்மனி இன்றுவரை பொறுப்பேற்றிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிகமாக அகதிகளை ஏற்றுக்கொண்ட நாடு யேர்மனி ஆகும். இங்கே வந்து தஞ்சம்கோரும் அகதிகளுள் அல் கைதா வின் நன்கு ஆயுதப் பயிற்சி பெற்ற தீவிரவாதிகளும் இருக்கிறார்கள். இவர்கள் ஐரோப்பாவிற்கு அமெரிக்காவிற்கும் பெரும் தலையிடியாக மாறப்போகும் காலம் வெகுதொலைவில் இல்லை.

இந்த எண்ணைச்சண்டை பற்றி அறியாத சிரியாவின் அப்பாவிப் பொதுமக்கள் இதுவரையில் 250,000 உயிர்களை இழந்திருக்கிறார்கள். ஆனால்; மேற்கத்தேய ஊடகங்களோ தாம் எதையுமே அறியாததைப் போலவே செய்தி வெளியிடுவதுதான் இந்த ஆண்டின் மிகப்பெரும் வியப்புக்குரிய விடயமாகும்.

மூலம்:riseforsyriya.com, Al Jazeera



PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்





HP dc7700 Tower

Intel Core 2 Duo E6300 - 2x 1.86GHz

80GB Festplatte

2GB DDR2 RAM

DVD/CD-Brenner

8x USB 2.0

1 Jahr Garantie

CHF 60.- inkl. MwSt.

PC Systeme komplett ab CHF 329.-!!

Keine versteckten Kosten, alles inkl. MwSt.!

Lenovo T410 Notebook

Intel Core i5 m540 - 2x 2.53GHz

250GB Festplatte

4GB DDR3 RAM

DVD-Brenner

3x USB 2.0, USB 3.0

1 Jahr Garantie



CHF 249.- inkl. MwSt.

!! REPARATUREN ALLER MARKEN !!




- sehr schnelle Lieferung!
- Hauslieferungen
- Vor-Ort Installationen
- Netzwerklösungen für Firmen
- Reparaturen aller Marken!

iPhone Reparaturen:

www.iphonefan.ch



Mac Pro 1.1

2x 5150 (4x 2.66GHz)

250GB Festplatte

8GB DDR2 RAM

Nvidia Geforce 7300GT Grafikkarte, mit 256MB RAM

1 Jahr Garantie

CHF 290.- inkl. MwSt.

günstige gebrauchte Computer Reparaturen aller Marken

www.pckaufen.ch

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01

Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22

Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50

Rosengartenstrasse 4- 8037 Zürich - Tel: 044 271 00 07

für Neuware besuchen Sie

pagevision.ch

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

## தங்க நகை சேமிப்புத்திட்டம் 2018

தை 1ம் திகதி 2018 ஆரம்பம்!

எமது
வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும் நத்தார்
புதுவருட வாழ்த்துக்கள்

தங்க நகை சேமிப்புத் திட்டம் ஜனவரி 1ம் திகதி தொடங்க இருப்பதால் எம்முடன் தொடர்பு கொண்டு அங்கத்தினராக சேர விரும்புவோர் சேர்ந்து கொள்ளவும் .
ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பாக 100.– Sfr. செலுத்த வேண்டும். அதிஸ்டம் அடைபவர்கள் தொடர்ந்து சந்தா செலுத்த தேவையில்லை. அவர்கள் 1200.– ஆகச.க்கு தங்கநகை பெற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் ஆண்டு இறுதியில் 1200.– Sfr. பெறுமதியான அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் தெரிவிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Neugasse 58, 8005 Zürich, Switzerland** www.nsjewellery.com

info@nsjewellery.com Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52



பாகம் 3



# பசுமை நிறைந்த நினைவுகள்...

## வண்ணை தெய்வம்

மனிதம் நிறைந்த மனிதர 'மக்கள் நேசன்"; 'கம்யூனிஸ்ற்" கார்த்திகேசன் என்ற மனிதருடன்ஞ்

மாணவர்களுக்கு ஆசிரியர்! அரசியல் நண்பர்களுக்கு தோழர்! எந்தத் துறையிலும் எதிரிகளே இல்லாத ஒரு மா,மனிதர். தனது உழைப்பை கட்சிக்கும், இல்லாதவர்களுக்கும் அள்ளிக் கொடுத்தார் அதனால் தனது குடும்பத்தை வாழவைத்தார் பிள்ளைகள்; அனைவருக்கும் தாராளமாக அவர்கள் விரும்பிய மட்டும் கல்விச் செல்வத்தைக் கொடுத்தார். இவை தவிர அவர்களுக்கென்று எதையுமே விட்டுச் செல்லவில்லாமல் மரணித்த் கார்த்திகேசன் அவர்கள்.

எங்கள் அயலில் இவர் தெய்வத்திற்கு நிகராக மதிக்கப்படுபவர்!. எமது வயதொட்ட தோழர்கள் இவரைப்பற்றிக் கதைக்கும்போது 'காத்தார்" என்றே பேசிக்கொள்வோம். ஆனால் நேரில் சந்திக்கும்போது 'மாஸ்றரர்" என்றே சொல்லிக் கொள்வோம். இவரது சொந்த ஊர் வட்டுக்கோட்டை. இவர் பிறந்தது மலாயாவில். ஐந்து வயதில் இலங்கை வந்த இவர் பின்னர் மலாயா செல்லவில்லை. வளர்ந்து பல்கலைக் கழகப் படிப்புவரை கற்று ஆசிரியரான பின்னர் பணி நிமித்தமாக கூடிய காலம் எங்கள் வீட்டிற்கு அண்மையிலேயே (கலட்டி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவும், நாச்சிமார் கோவிலுக்கு முன்பாகவும்) வாழ்ந்ததால் இவரை அடிக்கடி சந்தித்து உரையாடும் வாய்ப்பு அதிகம் பெற்றவன் நான்.

என்னை தெய்வம் என்றுதான் அழைப்பார். அதை வைத்துத்தான் பின்நாட்களில் எனது புனை பெயராக வண்ணை தெய்வம் என வைத்துக்கொண்டேன். வீட்டிற்கு வரும் தோழர்கமுடன் தேவை கருதி சிலருடன் சுருக்கமாகவும், சிலருடன் நீண்ட நேரம் உரையாடுவார். வந்தவர்களுக்கு தேநீர் கொடுப்பதற்கு மட்டும் இவரது மனைவி வாலாம்பிகை அம்மா வெளியே வருவார். மற்றும்படி அவரையோ அல்லது பிள்ளைகளையோ வெளியில் பார்க்க முடியாது.

நான் சிறு பையனாக இருந்த காலத்திலேயே இவர் யாழ் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டபோது நட்சத்திரம்; பொறித்த சிவப்புக் கொடியுடன் 'எங்கள் கேசன் கார்திகேசன்" எனக் கத்தித்திரிந்ததுண்டு. 1954ம் ஆண்டு நடைபெற்ற மாநகரசபைத் தேர்தலில் 10ம் வட்டாரத்தில் நின்று ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் சகபாடியான ஒற்றைக்கை துரைராசாவை தோற்கடித்தது தனியொரு கம்யூனிடாக நகரசபைக்கு சென்ற கார்த்திகேசன் தனது வாதத் திறமையாலும் இவர்மீது ஏனைய உறுப்பினர்கள் கொண்டிருந்த மதிப்பின் காரணமாகவும் தம்
மோடு ஐக்கியப்படக் கூடியவர்களை ஐக்கியப்படுத்தி சிறுபான்மை இனமான முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த ஜனாப் எம்.எம்.எம்.சுல்த்தான் அவர்களை தாமே முன்மொழிந்து யாழ்ப்பாணத்தின் நகரபிதா ஆக்கிய பெருமை காத்தாருக்கு உண்டு.

யாழ்ப்பாணம் விக்டோரியா வீதியில் இவர் குடியிருந்த காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து வருதை தந்திருந்த கம்யூனிஸ்ற் தோழர் ப.ஜீவானந்தம் அவர்கள் இவருடைய இல்லத்தில்த்தான் தங்கியிருந்தார். நான் இளைஞனான காலத்தில் கொழும்பில் இருந்து வருகை தரும் தோழர்களும், யாழ்ப்பாணத்தில் பொலீஸ் தேடுதலுக்க்குள்ளான பல கம்யூனிஸ்ற் தலைவர்ளும்; இவரின் வீட்டில் தங்கியிருந்ததையும் நான் அறிவேன்.

காத்தாருடன் உரையாடுவது ஒரு வரம் போல மிக கடினமான கருத்துக்களையும் நகைச்சுவையாகவே சொல்லுவார். உதாரணத்திற்கு தமிழரசுக்கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் கொழும்பு நீதிமன்றங்களில்த்தான் வழக்காடி உழைத்தவர். இவருக்கு மலைநாட்டில் பல ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள்

இருந்தன அதனாலும் பெரும் வருமானம் கிடைத்தது. அதேசமயம் காங்கேசன்துறை தொகுதியின் பாராளு மன்றப் பிரதிநிதியாக பலகாலம் இருந்தவர். செல்வத்தை (வரு மானத்தை) தெற்கிலும், தலைமைத்துவத்தை வடக்கிலும் பெற்றிருந்த அவரை செல்வம் அங்கே! நாயகம் இங்கே! என நகைச்சுவையாகக் கூறுவார்.

1956 பொதுத் தேர்தலில் இவர் யாழ்ப்பாணத் தொகுதியில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை எதிர்த்து போட்டியிட்டவர் என்பது பலரும் அறியாத விடயம்! அப்பொழுது போட்டியிடும் வேட்பாளர்களின் மனுவை மற்றைய வேட்பாளர் பரிசீலிக்கும் உரிமை நடைமுறையில் இருந்தது. அந்த வகையில் பொன்னம்பலத்தின் மனுவை பரிசீலித்த காத்தார் பொன்னம்பலத்திற்கு முன் இருந்த 'ஜீ" 'ஜீ" என்ற எழுத்திற்குப் பதிலாக 'ஜறி.ஜறி. என எழுதப்பட்டிருந்தது. எங்கள் காத்தாரோ 'இங்கு போடப்பட்டிருப்பது வடமொழி எழுத்து! தமிழில் இப்படியானதொரு எழுத்து இல்லையென்றும் ஆகவே இந்த மனுவை ஏற்றுக்கொள்வதை தான் அட்ழி சபிப்பதாகவும் கூறினார்" அந்த விண்ணப்பம் பொன்னம்பலத்திற்காக இன்னொருவரால் நிரப்பப்பட்டது. கையெழுத்தை மட்டும் பொன்னம்பலம் போட்டிருந்தார் ஆனாலும் அவர் கையொப்பம் இட்ட விண்ணப்பத்திற்கு அவர்தான் பொறுப்பு! விண்ணப்பத்தைப் பார்த்த பொன்னருக்கு தமிழ் ஜீ.க்கும் வடமொழி ஜறி.க்கும் வித்தியாசம் புரியவில்லை! எப்படித் திருத்துவது என தடுமாறிய பொழுது சசகபாடியொருவரின் உதவியுடன் பிழையைத் திருத்தி மனுவை திருத்திக் கொடுக்க காத்தாரோ 'முறையாக தமிழில் கா.க. பொன்னம்பலம் (காங்கேயன் கணபதி பொன்னம்பலம்) என எழுதியிருக்கலாம்தானே" என சொல்லி அங்கிருந்தவர்களைச் சிரிக்கவைத்தாராம்.

எதிரிகளால்க்கூட குற்றம் காணமுடியாத இந்த மா,மனிதர் 1977ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பத்தாம் திகதி மரணமடைந்த செய்தி அறிந்து வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்றபோது மிகக் குறைந்த மக்களைத்தான் அங்கு காணமுடிந்தது. அவர்களில் அன்று எனக்குத் தெரிந்த முகங்களாக மேயராக இருந்த 'மைனர்" நாகராசா, மாநகரசபை உறுப்பினராக இருந்த கொட்டடித் தெய்வேந்திரம் போன்றவர்கள்தான்! இவர் வீட்டில் சாப்பிட்டுஞ் படுத்துறங்கிய தோழர்கள் யாரையும் அன்று அங்கு காணவில்லை! மறுநாள் வீடமைப்பு அமைச்சராக இருந்த பீட்டர் கெனமன் அவர்கள் இவருக்கு அஞ்சலி செலுத்த வந்தபோது அவருக்கு முகம்காட்டுவதற்காக சிவப்புச்சட்டைகள் அணிந்தபடி பல நூற்றுக் கணக்கானவர்களைக் காணமுடிந்தது.

மனிதம் நிறைந்த அந்த அரிய மனிதர் மறைந்து நாற்பது வருடங்கள் மறைந்தோடிவிட்டது. அரசியல் எவ்வளவோ மாற்றங்களைக் கண்டுவிட்டது. ஆனால் காத்தார் போன்ற நல்ல நேர்மையான அரசியல்வாதியை இன்றளவும் காணமுடியவில்லை!.


நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!




தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல் "Umschuldung"

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், **60.000€** வரை உடனடி கடன் உதவி!

வீட்டுக்கடன்

1,2%

வட்டிவீதத்திலிருந்து பெற்றுத் தரப்படும்



50.000 - 122.000 யூரோ

அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிப் (0,5%) பணத்தைப் பெற்றிடவும், மற்றும் வீடு கட்டுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ தேவையான சகல வங்கிரீயான, சட்டரீதியான (Notar) உதவிகளையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து தருகின்றோம்!

மற்றும் எம்மிடம் அனைத்து விதமான காப்புறுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/10876361
0152/53961138
Th. Gobinath

**Alpenstr.1, 3072 Ostermundigen**
**Tel. 031 9312525 (Bern Nilavani)**

**Basel Str. 80, 6003 Luzern**
**Tel. 041 2405400**

## பொங்கல் பானை மற்றும் மெய்கண்டான் நாட்காட்டி இலவசம்

தைத்திருநாள் எம் திருநாளாம் தாயக நினைவுடன் தைப்பொங்கலை
கொண்டாடி மகிழ A.K.M நிறுவனம் அன்பான வாடிக்கையாளர்களுக்கு
உபயோகம் மிக்க பொங்கல் பானை மற்றும் 2018 ஆண்டிற்கான
மெய்கண்டான் நாட்காட்டி இலவசமாக வழங்குகின்றோம்!

**நீங்கள் செய்ய வேண்டியது:**
100CHF மேல் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டியதுதான்!
இச்சலுகை எமது இரண்டு நிறுவனங்களிலும் கிடைக்கும்




மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய
இலாபம் A.K.M இல் மட்டும் தான்!

அன்பான உங்கள் ஆதரவால் முன்னனியில்
திகழும் A.K.M நிறுவனத்தினர்
உங்களுக்கு நன்றிகளை தெரிவிக்கின்றனர்





A.K.M முத்திரைபதித்த அனைத்து பொருட்களையும் ஒரு முறை சுவைத்தால்
ஈழத்து சுவை உங்கள் நாவில் ஆழமான தனிச்சுவைதரும்!


# AMMA's food

Sri Lankan & South Indian Specialities

வெள்ளிக்கிழமை அறுசுவையுடன் மரக்கறிச் சாப்பாடு
மற்றும் பாலப்பம், சனிக்கிழமை ஸ்பெஷல் பிரியாணி
மற்றும் பாலப்பம் இன்னும் பற்பல...




வாடிக்கையாக்கள்' நண்பர்கள்' அன்பர்கள்
அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு 15.12.2017 முதல்
05.01.2018 வரை தனிநபருக்கான வரையறுக்கப்படாத
உணவு 12.90 மட்டுமே!



எதுவும் சாப்பிடலாம்...
எவ்வளவும் சாப்பிடலாம்...
வாருங்கள் வந்து பாருங்கள்...
விருப்போடு உண்ணுங்கள்...
வியந்து செல்வீர்கள்...


## மற்றுமொரு நற்செய்தி!!!

01.01.2018 முதல் எமது உணவகத்தால்
**LIEFERUNG** செய்யப்படும் என்பதை எமது
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்!

*Öffnungszeiten:*
*Mo. - Do.: 11:30 - 22:30*
*Di.: Geschlossen*
*Fr. & Sa. 11:30 - 23:00*
*So. & Feiertag: 15:00 - 22:30*

**Rheinische Str. 80,**
**44137 Dortmund**
**Tel.: 0231-33898691 | Fax: 0231-33898693**
**Web: www. ammas-food.de**
**Mail: info@ammas-food.de**

உங்கள் இல்ல வைபவங்களுக்கும் உணவு தயாரித்துப் பரிமாறக் காத்திருக்கின்றோம்!



7

# கிராமங்களில் இருந்து ஐரோப்பாவரை
# இசை – நாடக – கூத்துக் கலை

**வண்ணை தெய்வம்**

வாசகர்களே! கடந்த ஆறு அங்கங்களில் யாழ்ப்பாணத்திலும் அதனைச் சுற்றியுள்ள நகரங்களிலும் உள்ள கூத்துக் கலைஞர்களின் தகவல்களைத் தந்து வந்தேன். கூத்துக் கலையில் யாழ்ப்பாணத்துக் கலைஞர்களுக்கு நிகராக தீவுப் பகுதிகளிலும் பலர் இருந்துள்ளார்கள். இவர்கள் கூடுதலாக யாழ்ப்பாணத்துக் கலைஞர்களுடன் இணைந்தே நடித்து வந்தாலும் தங்கள் ஊர்களில் கூத்து நடாத்தும்போது தீவுப்பகுதிக் கலைஞர்கள் எல்லாம் ஒன்றுகூடி நடிப்பதுதான் இவர்களின் சிறப்பு அந்த வகையில் இந்த இதழில் நயினாதீவு, நெடுந்தீவு, மற்றும் ஊர்காவற்துறை ஆகிய ஊர்களில் இருந்து மூன்று கலைஞர்களின் தகவல்களைத் தருகின்றேன்.



**திரு.நா.வை.விசுவலிங்கம்**
**இசை நாடகக் கலைஞர்**
**6ம் வட்டாரம்**
**நயினாதீவு**

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. விசுவலிங்கம் அவர்கள் தனது பன்னிரண்டாவது வயதிலேயே யாழ்ப்பாணம் மூளாயைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் அவர்களிடம் தவில் கற்க ஆரம்பித்து அக்கலையைக் கற்றுக் கொண்டவர். பின்னர் தனது படிப்பையெல்லாம் ஓரளவு முடித்துக்கொண்டு பதினேழாவது வயதிலேயே தபால் இலாக்காவில் வேலையில் சேர்ந்தவர் கலை ஆர்வம் காரணமாக தனது இருபதாவது வயதில் அன்று யாழ்ப்பாணம் முதலாம் தெருவில் இருந்த நாடகக் கல்லூரியில் நாடகக் கலையையும் இருபத்திரண்டாவது வயதில் சங்கீதபூசணம் ஏ.எஸ். இராமநாதன் அவர்களிடம் மிருதங்கத்தையும் முறைப்படி கற்றுக்கொண்டவர்.

அரச சேவையில் இருந்தபடியே மிருதங்க நிகழ்ச்சிகளோடு கூத்து நாடகம் கதாப் பிரசங்கம் வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளையும் நடாத்தியதோடு 'மிருதங்க மாமணி" 'மிருதங்க சாசரச்சுடர்" 'மிருதங்க விற்பனர்" ஆகிய பட்டங்களை பெற்றுள்ளதுடன் இலங்கை வானொலியிலும் பல தடவைகள் நிகழ்ச்சிகள் நடாத்தியுள்ளார்.

இசை நாடகங்களை ஆரம்பகாலங்களில் 'கலாவி னோதன்" சின்னமணி, வித்துவான் திரு.சி.துரைச்சாமி, வித்துவான் திரு.ப.க.காமாட்சிசுந்தர், புலவர் திரு அரியநாயகம், பண்டிதர் திரு.நா.கந்தசாமி போன்ற இன்னும் பல பெரும் கலைஞர்களுடன் எல்லாம் இணைந்தும் அவர்களது இயக்கங்களில் நடித்தும் வந்தவர் பிற்காலங்களில் காத்தவராயன், வாலி சபதம், நொண்டி நாடகம் ஆகிய கூத்துக்களை இயக்கியும் மேடையேற்றியுள்ளார். தீவுப் பகுதியில் மிகவும் மதிக்கப்பட்ட கலைஞர்களில் இவர் முக்கியமானவராவார்.



**அண்ணாவியார்.**
**ஜேம்ஸ் அடைக்கலம்**
**11ம் வட்டாரம்**
**நெடுந்தீவு**

அண்ணாவியார் திரு.ஜேம்ஸ் அடைக்கலம் அவர்கள் நெடுந்திவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எட்டாம் வகுப்புவரையே இவரது கல்விப் படிப்பு! ஆனால் கூத்துக் கலையில் ஒரு பேராசிரியருக்கு நிகரானவர்.

நெடுந்தீவில் பிரபலமான கூத்துக் கலைஞரான திரு. அந்தோனி கௌரியல் அவர்களைக் குருவாகக் கொண்டு மிகச் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராக விளங்கிய இவருக்கு ஊர் மக்கள் வழங்கிய ஊக்கமும் உற்சாகமும் இவரை சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞன் ஆக்கி இவரே பத்துக்கும் மேற்பட்ட நாடகங்களை

பழக்கி மேடையேற்றியதுடன் பல கலைஞர்களையும் உருவாக்கியுள்ளார்.

பிற்காலத்தில் இவர் கண் பார்வை குறைந்திருந்த காலத்தில் இவரின் கலைச் சேவையைப் பாராட்டி 1993ம் ஆண்டு பொதுமக்களாலும் மதகுருமாராலும் பாராட்டி பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

திரு ஆனாசி அருளப்பு
நாரந்தனை வடமேற்கு
ஊர்காவற்துறை



நாரந்தனை வடமேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.ஆனாசி அருளப்பு அவர்களுக்கும் கல்விப் படிப்பு எட்டாம் வகுப்புவரைதான். இவருடைய தொழில் கமம் செய்வது. அந்தக் காலத்தில் காலஞ்சென்றவர்களான அண்ணாவியார்களான செல்லையா, மற்றும் இவரது மாமனார் பூந்தான் ஜோசேப்பு ஆகியவர்களின் கூத்துக்கள்தான் ஊர்காவற்துறை மற்றும் நாரந்தனை ஆகிய பகுதிகளில் மேடையேறி வந்தன. இவர்களின் கூத்துக்களைப் பார்த்தபின்னர் அந்தக் கூத்துப் பாடல்களை பாடமாக்கி வயலில் பாடி மகிழ்ந்து வந்த அருளப்பு அவர்கள் பின்னர் மாமனார் பூந்தான் யோசேப்பு அவர்களிடமே கூத்துப் பழகி அவருடனேயே இணைந்து நடித்து பிற்காலத்தில் பிரபலமான தென்மோடி நாட்டுக்கூத்துக் கலைஞராக விழங்கினார்.

பிரபல கூத்துக் கலைஞர்களான பேக்மன் ஜேயராஜா, அந்தோனி பாலதாஸ், வஸ்தியாம்பிள்ளை அல்பிறட், ஆகியோருடன் எல்லாம் இணைந்து நடித்த பெருமை இவருக்கு உண்டு. 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்து அரியாலையில் வாழ்ந்து வந்த இவர் அங்கிருந்தபடி பல நாடகங்களை இயக்கி மேடையேற்றியுள்ளார்.

கலாநிதி பூந்தான் யோசேப்பு அவர்களால் 'கலைக்காவலன்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இவரை 1977ம் ஆண்டு கொழும்பு மாநகரில் புனித அந்தோனியார் பழைய மாணவர்கள் 'அமிர்தகான அண்ணாவி" என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்கள். 1978ல் ஊர்காவற்துறையில் நடைபெற்ற அன்னை வேளாங்கன்னி நாட்டுக்கூத்து மேடையில் ஊர் மக்களால் 'நாடக இரத்தினம்" என்னும் பட்டத்தை வழங்கியதோடு பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



# Jaffna Stores

Feilenstr. 8, 33602 Bielefeld | Tel.: 0521 174794 | Mob.: 0173 2807906



ஆசியா, ஆபிரிக்கா, சீனா,
நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன், உடன்
மரக்கறிவகைகள், மீன் வகைகள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
Bielefeld நகரில்
ஒரு மாபெரும் நிறுவனம்.


*மொத்தமாகவும், சில்லறையாகவும்*
**NSR** *தயாரிப்புகளை விற்பனைசெய்ய விரும்புவோர்*
**Jaffna Stores** *உடன் தொடர்புகொள்ளுங்கள்.*

*African உணவுப் பொருட்களை மொத்தமாகவும்*
*சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*



**Öffnungszeiten:**
**Montag bis Samstag**
**von 08:30 bis 20:00**

**Geschäftsführer: Thayaharan Nadarajah**
**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**






Importas Cash & Carry

# Cash & Carry in Zurich

## Biggest Asian Shop in Swiss




## IMPORTAS CASH & CARRY


Basler Str. 102, 8048 Zürich- Switzerland

Tel: +41 43 343 03 55 - Fax: +41 43 343 03 56

**Direct Importers and Solo Distributors of**

Kings
Subash
ELAKKIA
Niru
SURYAA
Maliban
Rubicon

Importas Cash & Carry, Baslerstrasse 102, 8048 Zurich, Switzerland. Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56



# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி

பாகம் 5

ஒரு நாட்டை உளவு பார்க்கும் வல்லரசு, அந்த நாட்டினுடைய குறிப்பிட்ட கட்டமைப்பை மட்டுமே குறி வைத்து உளவு பார்க்காது. ஒரு நாட்டினுடைய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முப்படைகளின் கட்டமைப்புகள் மட்டுமே உளவு பார்ப்பவர்களுக்கு முக்கியமல்ல.

உதாரணமாக நாலு கோடி சனத்தொகை கொண்ட ஒரு நாட்டின்,என்னென்ன கட்டமைப்பு அலகுகள் மூலமாக அந்நாட்டு அரசு தனது மக்களை நிர்வகிக்கின்றதோ அத்தனை கட்டமைப்புகளையும் உளவு பார்க்கும் நாடு மிக உன்னிப்பாக கவனிக்கும்.

இந்த கவனித்தல் என்பது,அந்நாட்டு அரசு உட்பட அந்நாட்டின் நிலப்பரப்பு, மக்கள் என அனைத்தையும் தனது பார்வைக்குள் உளவு பார்க்கும் நாடு கொண்டு வந்துவிடும். ஒவ்வொரு நாளும் அந்நாட்டின் அனைத்துச் செயல்பாடுகளையும் ஒற்றர்கள் மூலம் தனது நாட்டிலிருந்தே கவனிக்கத் தொடங்கிவிடும். ஒரு நாட்டினுடைய வளங்களே அந்த நாட்டினுடைய காத்திரத்தன்மையை நிலைக்கச் செய்பவனைவையாகும்.

ஒரு நாட்டினுடைய வளங்களாக,அந்த நாட்டினுடைய நிலம், அதன் மண் வகை, மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் கனிவளங்கள்,நீர்நிலைகள், காடுகள், மிருகங்கள் பறவைகள் என்பனவற்றுடன் அந்நாட்டினுடைய செல்வத்தை அதிகரிக்கச் செய்கின்ற பொருளாதாரத்தைக் கொடுக்கின்ற விவசாயம், தொழிற்சாலைகள்,பணத்தின் மதிப்பீடு, சேமிப்பின் நிலை, தங்கம், எரிபொருள்கள், கல்வி, மருத்துவம், மருந்துகளை கண்டு பிடித்து தயாரித்தல், ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள், பலம்பொருந்தியதும் நுட்பத்தன்மை கொண்டதுமான இராணுவம், பலம்பொருந்தியதும் நுட்பத்தன்மை கொண்டதுமான காவல்துறை, தொலைத்தொடர்பு வளம், போக்குவரத்து நிலைப்பாடு, உற்பத்தி செய்வோர், சந்தைப்படுத்துவோர், உற்பத்திப் பொருட்களின் தரம், நோயற்ற மனித வளம் என்பன அடங்குகின்றன. இக்கட்டமைப்புகள் யாவும் சீரான ஒரு செம்மைப்படுத்தலில் இருக்கும் போதுதான் ஒரு நாடு பலம் பொருந்திய நாடாக இருக்கும்.

இக்கட்டமைப்பகளின் செயல்பாடுகளை உன்னிப்பாக ஒற்றர்கள் மூலம் கவனிப்பதும், இக்கட்டமைப்புகளில் ஆங்காங்கே சிறு சிறு துவாரங்களை ஏற்படுத்துவதற்காக அதிருப்தியாளர்களை விமர்சகர்களை கண்டனம் செய்பவர்களை உருவாக்குதல் என்பது வல்லரசு நாட்டின் குறிக்கோளாகும்.

இதன் மூலம் வலுவிழந்த அரசை ஏற்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் வல்லரசு தகுந்த நேரம் பார்த்து குழப்பங்களை ஏற்படுத்தத் தொடங்கும். ஒற்றர்களாக நியமிக்கப்பட்டவர்கள் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக குழப்பகாரர்களில் எவர் எவருக்கு எது எது தேவையோ அதனை அவர்களுக்கு வழங்கத் தயங்கமாட்டார்கள். இதற்காக கோடிக்கணக்கான பணத்தைச் செலவிடுவார்கள். பணம், பெண் பொருள் என்ற வகைப்படுத்தலில் ஒற்றர்களை கைக்குள் போட்டுக் கொள்வார்கள்.

அரசியல் காத்திரத்தன்மை அற்ற நாடுகளையும்; தேசிய விசுவாசம் அற்ற மக்களைக் கொண்டிருக்கும் பலவீனமான நாடுகளையும் வெகு சுலபமாக தமது நோக்கத்திற்குள் வல்லரசு நாடு கொண்டுவந்துவிடும்.

பலவீனமான நாடுகளில் பேருந்து சாரதி உட்பட பலர் ஒற்றர்களாக செயல்படும் நிலை தோன்றிவிடும். சம்பள உயர்வுப் போராட்டத்தையோ சலுகைக்கான போராட்டத்தையோ காலம் அறிந்து அதனை விஸ்வரூபமெடுக்கச் செய்வதில் ஒற்றர்கள் செயல்படுவார்கள்.

போராட்டத்தை ஆரம்பித்தமைக்கான காரணத்தை பணியாளர்கள் தொழிலாளர்களுக்கு நியாயமாக சொல்வது போல தோற்றப்பட்டாலும் அதற்கான அடிவப்படைக்காரணம் ஒற்றர்களுக்காக இயங்கும் போராட்டத்தை தலைமை தாங்குபவர்களுக்கே தெளிவாகத் தெரிந்திருக்கும்.

ஒவ்வொரு போராட்டத்தினாலும் பாதிக்கப்படுபவர்கள் அமைதியாக வாழவிரும்பும் மக்கள்தான். போராட்டத்தின் பயனாக அரசு மீது அதிருப்தியும் சீற்றமும் மக்களுக்கு ஏற்பட்டுவிடும்.

அரசு மீதான இத்தகு சீற்றத்தையும்,அதிருப்தியையும் எத்தீர்வுக்கும் வரமுடியாதவாறு வளர்த்துவிடுவதில் உளவு நிறுவனத்தின் ஒற்றர்கள் மிகத் தீவிரமாக இருப்பார்கள். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அவனது இயல்பு சார்ந்த பலம் பலவீனம் இருக்கும்.அதனை, அவனுடன் நுட்பமாக பழகி அவனை அறியாமலே கண்டு கொள்ளும் உளவு நிறுவனம் அதற்கமைய பலவீனத்தைக் கண்டறிந்து அவனுடைய தேவையை பூர்த்தி செய்துவிடும்.

இதனால் இலகுவாக நிறைவுக்கு வர வேண்டிய போராட்டம் மிக இறுக்கமான சூழ்நிலையை நோக்கி நகரத் தொடங்கும். இப்போராட்டத்தில் அணிவகுத்து நிற்கும் தொழிலாளிகளுக்கோ பணியாளர்களுக்கோ போராட்டம் ஏன் இறுக்கமான நிலையை எட்டியது என்பதை அவர்கள் அறியாதவர்களாக இருப்பார்கள்.

தொடர்ச்சியான போராட்டங்கள் அதனால் ஏற்படும் தீவிரவாதப் போக்கு போன்றவையால் கிளர்ச்சி வடிவைப் போராட்டம் எட்டுகையில் பொதுச் சொத்துக்கள் சேதமாக்கப்படுதல் தீ வைத்தல் போன்றவை ஏற்படுகின்றன.

இவற்றை போராட்டக்காரர்கள் செய்யாவிட்டாலும், ஒற்றர்கள் சிலரை அதற்காகவே ஏற்பாடு செய்வார்கள். போராட்டக்காரர்களோடு போராட்டக்காரர்களாக கலந்து நிற்கும் இந்த ஒற்றர்களின் கையாட்கள் கலவரங்களைத் தூண்டிவிட அது பெரிய வன்முறையாக வெடித்துவிடும். இதனால் அந்த நாட்டில் ஒரு அசாதாரண சூழ்நிலை தோன்றிவிடும். இந்த அசாதாரண சூழ்நிலை



பொதுமக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கத் தொடங்கும். போராட்டம் கிளர்ச்சி வன்முறையென வளர்ந்து கொண்டு போகையில் மக்களின் அரசுக்கு எதிரான உணர்வுகள் ஒருமித்த வடிவம் பெற அதுவே எதிர்கட்சிகளுக்கு துணைபோக ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுக்கும்.எதிர்கட்சிகளை காலம் பார்த்து உளவு நிறுவனங்கள் கையாளத் தொடங்கிவிடும்.

தமது சொல்லைக் கேட்கின்ற பொம்மை அரசை நிறுவுவதற்கு இச்சூழ்நிலை சாதமாக அமைந்துவிடுகின்றது. ஒரு நாட்டில் ஏற்படுகின்ற தளர்ச்சியான பொருளாதார நிலவரம், மக்களின் அதிருப்தி போன்றவை அந்த நாட்டில் பலவீனமான அரசையே ஏற்படுத்தும்.

வல்லரசு நாட்டின் உளவு நிறுவனங்கள் ஆசியநாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் அரேபிய நாடுகளிலும் மிகச் சுலபமாக தமது உளவு வேலைகள் மூலம் அந்நாட்டு அரசுகளின் உறுதித் தன்மையை நிலைகுலைய வைப்பதற்குக் காரணம் அங்கு நிலவும் வறுமை,பல்லின மக்களின் அரசியல் ஏற்றதாழ்வுகள் முதல் காரணமாகிவிடுகின்றன.

பல்லினம் வாழும் நாடுகளில் நிலவும் இறுக்கமான தேசிய உணர்வற்ற நாட்டு மக்களின் மனப் போக்கினாலும்,சக இனத்தின் சமநிலை உரிமையை ஏற்றுக் கொள்ளாமையும் உளவு நிறுவனங்களுக்கு சாதகமான அணுகுமுறைக்கு வழிவகுத்துவிடுகின்றன.

(தொடரும்)





**23.12.2017 - 03:00PM**

**Kumkapi Event-Palast**

**Zum Eisenhammer 5b, 46049 Oberhausen**

# StaR-Impex

**9வது** ஆண்டில் கால்பதித்திருக்கும் எமது நிறுவனத்திற்க்கு ஆதரவு வழங்கிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது

**மனமார்ந்த நன்றிகள்!**




**Öffnungszeiten:**

**Mo-Fr: 10:30 - 19:30**

**Sa: 9:30 - 18:00**

**யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!**

**Kipper Str. Tor. 03**
**44147 Dortmund**

**Tel: 0231 86 02 696**

**Mobil: 0172 21 83 703**
**Fax: 0231 86 02 698**
**E-Mail: star-impex@live.de**
**Web: www.star-impex.net**

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள் ..? என்ர பாடு அப்பிடியும் இப்பிடியும் தான் பாருங்கோ. குளிர் வந்தால் ஏனடா இந்த வாழ்க்கை எண்டு இருக்கும். அதுக்காக கோடை காலம் வந்தால் மட்டும் வாழ்க்கை ஆகா ஓகோ எண்டு இருக்கிறதாக நினைக்கப்படாது. அப்பவும் வாழ்க்கை அப்படியும் இப்பிடியும் தான் பாருங்கோ. சமூகம் எண்டுறது மனிதரின் இன அடிப்படையிலான ஒற்றுமையைக் காப்பாற்றும் விதமாக கட்டியமைக்கப் பட்டால்தான் பாருங்கோ வாழ்க்கை வெய்யில் காலத்திலையும் குளிர் காலத்திலையும் ஒரே மாதிரி இருக்கும். என்னடா இது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறான் எண்டு யோசிக்கிறியளே. ஐயோ சமூகம் எண்டால் நீங்களும் நானும்தான் பாருங்கோ. இஞ்ச எங்களுக்குள்ள சரியான ஒற்றுமை நிலவுமாக இருந்தால் நாங்கள் எல்லாம் இப்ப உலகத்திலேயே அதி சிறந்த இனமாகவும், தனியான தாயகத்தைக் கொண்ட மக்களாகவும் சிறப்பா இருந்திருப்பம். அப்படி எண்டால் ஏன் வெளிநாடு வாறம். இதைத்தான் சுருக்கமாகச் சொன்னான் பாருங்கோ.

உதெல்லாம் இப்ப காலம் கடந்த கதை எண்டு நினைக்கிறியளே..? ஐயோ, காலம் கடந்தா என்ன, கடக்காட்டி என்ன நாங்கள் எப்பவும் அப்பிடியே தானே இருக்கிறம். பிறகென்னண்டு நாங்கள் அடிப்படையை மாத்துறது பாருங்கோ. தமிழன் வெளிநாட்டில ஒற்றுமையாக இயங்குற ஒரு இடத்தைச் சொல்லுங்கோ பாப்பம். காட்டினியள் எண்டால் நான் கம்மெண்டு இருக்கிறன். எங்கெங்கே தமிழன் இருக்கிறானோ அங்கயெல்லாம் இன்னமும் ஒருத்தரை ஒருத்தர் அடக்கியாளுற பிரச்சனை நடந்துகொண்டுதான் இருக்கு பாருங்கோ. அதிலும் உந்தச் சம்பளமில்லாத உத்தியோகத்தராக இயங்குற ஆக்கள் இருக்கினமல்லோ, அவைதான் எங்கயும் அதிகப் பிரசங்கித்தனம் பண்ணுற ஆக்கள் பாருங்கோ. தான் இலவசமாகச் சேவை செய்யுற படியால் எல்லாரும் தன்னுடைய கதையைக் கேக்க வேணும் எண்டுறது அவையளின்ர எழுதப்படாத விதி பாருங்கோ. கொஞ்சம் பழைய ஆக்கள் உதைக் கேக்கலாம். ஆனால் புதுப்பெடியள் கேப்பாங்களோ எண்டுறதுதானே பிரச்சனை. அப்படி அவங்களோட குத்தி முறிஞ்சால் தான் ஏதோ பெரிய ஆளாக வரலாம் எண்டுறது அவையின்ர நினைப்புப் பாருங்கோ.

உங்க ஒரு இடத்தில இருக்கிற குத்தியர் ஒருத்தர் அதிகப்பிரசிங்கத்தனம் பண்ணுறதுல மகா விண்ணன் பாருங்கோ. அவர் வால்பிடிச்சு வானமேறத் துடிக்கிற நபர். நீண்ட நாட்களாக நானும் அவரின்ர திருவிளையாடல்களைப் பாத்திருக்கிறன். ஊரில உள்ள இரண்டு மூண்டு பொதுஅமைப்புக்களுக்க ஆள் ஒருமாதிரித் தலையை ஓட்டிப் போடும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாப் புத்தெடுக்க ஆரம்பிக்கும். புத்தெடுக்கிறது எப்பிடி எண்டு கேக்கேல்லை........, ? முதலில தன்ர மனிசி தொடக்கம் மச்சாள்மார் வரைக்கும் ஒவ்வொரு ஆளாக அந்தப் புத்துக்குள்ள கொண்டு வந்திடும். பிறகு எல்லாம் சேர்ந்து நிண்டு அதுக்குள்ளே நிக்குற

எல்லாரையும் வெளியில கலைச்சுப் போடுவினம். அப்பிடி நீண்ட நாட்களாக நடந்த விடயங்களால அதிகமான ஆக்கள் இப்ப வெளியில போட்டினம். இப்ப அந்த ஊர்ல இருக்கிற கல்வி சம்பந்தமான அமைப்பிலே குத்தியர் பொறுப்பா இருக்கிறார். அங்கால கல்வி, கலை கலாச்சாரம் எண்டு அவரின்ர மச்சாள் பொறுப்பு வகிக்கிறாவாம். வெளிநாட்டவருக்கான பொது அமைப்பிலே அவரின்ர துணைவியார் கோலோச்சுறாவாம். உதுபோதாதெண்டு புதுசா இன்னுமொண்டுக்கையும் பூந்திட்டினமாம். பக்கத்தில ஒரு கோயில் இருந்தது பாருங்கோ. அதுக்கையும் இப்ப புத்தெடுக்க வெளிக்கிட்டிருக்கிறதாகக் கேள்வி.

வெளிநாட்டவருக்கான பொது இடத்தில சனிக்கிழைமையில தமிழ் மக்களுக்கென்று ஒரு இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. அங்கே அவையள் கலை, கலாசாரம் மற்றும் பொது விடயங்கள் பற்றிய ஒன்றுகூடல்களை நடாத்த அனுமதி இருந்தது. அதுக்குள்ளே ஏற்கனவே ஒரு தையல் வகுப்பும் நடந்ததாகக்கேள்வி. பெயர் இலவசத் தையல் வகுப்பு. ஆனால் கொஞ்ச அனுமதிக் கட்டணம் செலுத்தவேணும். ஒருபக்கத்தால பார்த்தால் பாருங்கோ வந்து போற தையல் ஆசிரியருக்கு ஆகக்குறைஞ்சது போக்குவரத்துச் செலவாவது கிடைக்கத் தானே வேணும். அங்கே கொஞ்சக் காசு வருதெண்டு குத்தியர் அவதானிச்சுப் போட்டார். உடனடியாக தன்ர மச்சாளில ஒருத்தியை அங்க வகுப்பிலே சேர்த்துப்போட்டார். அவை கொஞ்சம் கொஞ்சமா இடம் பிடிச்சு, பிறகு மதத்தையே எழுதிக் கேக்குற ஆக்கள் எண்டுறது தெரியாமல் இல்லை. ஆனால் தையல் படிக்க வந்த பிள்ளையை எப்பிடி மறுக்கிறதெண்டு ஆசிரியரும் சேர்த்துக்கொண்டா பாருங்கோ. அனுமதிக்கட்டணம் செலுத்தித் சேருறது தான் பாருங்கோ இவ்வளவுநாளும் அங்க எழுதப்படாத விதி. குத்தியரின்ர மச்சாள் வகுப்பிலே சேர்ந்த உடனே அனுமதிக்கட்டணத்துக்குப் பற்றுச்சீட்டுக் கேட்டிருக்கிறா பாருங்கோ. உண்மையில அந்த இடத்தில பணம் வாங்க அனுமதி இல்லை எண்டுறது தான் விதி. ஆனால் வந்துபோற ஆசிரியர் சொந்தச் செலவில் வந்துபோக முடியாதுதானே. அதுக்குத்தான் அந்த அனுமதிக் கட்டணம் எண்டு சொல்ல, மச்சாள் அப்பிடியே காசு கட்டாமல் வெளிய போனதும் பத்தாமல், மறுநாள் அந்த இடத்துக்குப் பொறுப்பா இருக்கிற இந்த நாட்டுப் பெண்மணியிட்டப் போய், அந்தத் தையல் வகுப்பால ஏதோ கோடி கோடியாகக் காசு வாற மாதிரியும் அந்த ஆசிரியரின்ர முழு நேர உழைப்பே அதுதான் எண்டும் போட்டுவிட, அந்த மேலதிகாரி இப்ப இடத்தின்ர அனுமதியை நிறுத்திக்கொண்டார். உடன மச்சாள் தன்ர சமயோசிதப் புத்தியைப் பாவிச்சு, அதைத் தான் இலவசமாக நடத்துறன் எண்டு காலில விழுந்து கதைச்சு, அந்த இடத்தை எடுத்து தையல் போய் இப்ப நடனவகுப்பு நடக்குது. ஆனால் என்னமாதிரி நடக்குது தெரியுமோ..? நடன வகுப்புக்கான பணத்தை நீங்கள் மச்சாள் வீட்டில கொண்டுபோய் கட்டவேணும். ஆனால் வகுப்பு நடக்கிற இடத்தில எந்தவிதமான பணப்புழக்கமும் இல்லை. எப்பிடி மச்சாளின்ர திருவிளையாடல்.. சும்மா சொல்லக்கூடாது பாருங்கோ. தமிழக அமைச்சர்களை விஞ்சிய பெண்மணிகள் எங்கட ஆட்களிலையும் இருக்கினம். உப்பிடியான மச்சாள் மாரெல்லாம் தமிழகம் போனால், சசிகலா, ஜெயலலிதா எல்லாம் பிச்சை வாங்கவேணும் கண்டியளோ.

இனி இஞ்சால குத்தியரின்ர மனைவியாரின்ர திருகூத்தையும் கொஞ்சம் கேளுங்கோவன். இப்ப இங்க தமிழாசிரியர்கள் எல்லாம் கூடித்தானே போச்சு. தங்கத்துக்கு ஒத்தகருத்து என்னெண்டு ஒரு பிள்ளை கேக்க, டுடுபவுண்டுடு எண்டு எழுதிக்கொடுத்த தமிழாசிரியர் தான் குத்தியரின்ர மனைவி. இந்தியாவில உள்ள ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலே காசைக் குடுத்து, தமிழ்முதுகலை மாமணி பட்டம் வாங்கின ஆட்கள்தான் இப்ப ஐரோப்பாவில் அதிகம் பாருங்கோ. ழகர, ளகர வித்தியாசம் தெரியாமல் முதுகலைப் பட்டம் வாங்கினால் தமிழ் கொஞ்சம் கொஞ்சமா டமில் ஆகாமல் என்ன செய்யும். ஐயைய்யோ, தமிழுக்கு வந்த தலையிடியைப் பாருங்கோவன். அம்மணி படிப்டுடுபிய்க்கிறடுடு இடத்தில தமிழ் மொழி சம்பந்தமான போட்டிகளில யாரெல்லாம் பங்குபற்றுறது எண்டு அம்மணி தானாம் தீர்மானிக்கிறது. முக்கியமாக தன்ர குடும்பம். தன்ர தமையன் தம்பி குடும்பம், அங்கால புருசனின்ர பக்கத்துப் பேர்வழிகள், இதர குடும்ப நண்பர்களுக்குத் தான் முதல் அனுமதி. பிறகு கணக்குக்கேக்குறவன், நியாயம் கேக்குறவன் பேர்வழிகளின் பிள்ளைகளுக்கு போட்டி பற்றிய அறிவித்தலே இறுதியாத் தான் வருமாம் எண்டாப் பாருங்கோவன். இப்ப கொஞ்சம் கொஞ்சமா அந்த இடத்தின்ர துணைத் தலைமைப் பதவிக்கு மனைவியார் வந்திட்டா. எப்ப தனக்கு உவள் ஆப்பு வைக்கிறாளோ தெரியேல்லை எண்டு, இவ்வளவு நாளாத் தலைமையா இருக்கிற அம்மணி வெளிப்படையாவே கதைக்கிறாவாம்.

சரி, உந்த இரண்டு இடமும்தான் போச்சு, பக்கத்தில இருக்கிற கோயிலிலேயாவது தங்களுடைய பணியைச் செய்வாம் எண்டு போன சனத்துக்கு அங்கேயும் இடியாம் பாருங்கோ. குத்தியரின்ர ஒன்றுவிட்ட தம்பியார் இப்ப அங்க வந்து கொஞ்சம் கொஞ்சமாக் கனைக்கிறாராம். கடந்த வருடம் நடந்த திருவிழாவில பூசகருக்குப் பின்னாலயே கோடி பிடிக்காத குறையா அலைஞ்சானாம் பாவி. டுடுபூசை செய்வது எப்பிடிடுடு எண்டு எங்கையும்

புத்தகம் வாங்கிப் படிச்சிட்டு, உப்ப ஆள் ஒத்திகை பாக்குது போல கிடக்குது. ஏன் எண்டால் பாருங்கோ, அந்தக் கோயிலுக்கு நிறையச்சனம் வாராது வழமை கண்டியளோ. உண்டியல் அடிக்கடி நிரம்புது எண்டு குத்தியருக்கும் தம்பியாருக்கும் நல்லாத் தெரியும் பாருங்கோ. அதுதான் தம்பியார் ஐயருக்குப் பின்னால அலையுறார் எண்டு நினைக்கிறன். நல்லா இருந்த பெடிப்பிள்ளை இப்ப தாடி வேற வளர்க்கிறார் எண்டால், ஆள் கெதியில ஐயராகும் எண்டு எதிர்பார்ப்பதாக ஊர்வட்டாரம் தெரிவிக்குது கண்டியளோ. தாடி வளர்த்தால் ஐயராகலாம் எண்டு எனக்குத் தெரிஞ்சிருந்தால், நான் எப்பவோ ஐயராகியிருப்பனே. கோதாரி, புதுசு புதுசாக் கண்டுபிடிக்கிறாங்கள், எங்களுக்கு ஒண்டும் வருகுதில்லை அப்பனே. மொக்குச் சாம்பிராணிக்கு தேவாரம், திருவாசகம் சொல்லத் தெரியுமோ எண்டுறது மேல உள்ளவனுக்குத் தான் வெளிச்சம்.

இப்ப குத்தியர் வெள்ளைச்சட்டைக் குழுவிலையும் ஒரு நிரந்தர அங்கத்தவர் பாருங்கோ. டுடுகழிவுக்கு முந்தின காற்றைபோலடுடு ஆள் வேலைசெய்யுறதில அதியுயர் நாட்டாமை கண்டியளோ. இவருக்கு மேல இருக்கிற வெள்ளைச்சட்டைக்கு ஆள் அவ்வளவு விசுவாசம் பாருங்கோ. மேல உள்ள சட்டை கூப்பிட்டால், உடனே இவர் தான் கீழ்ச்சட்டை போடாததையும் மறந்து ஓடுவராம். அப்பிடி எண்டால் என்ன பொருள் எண்டு நீங்களே ஊகிச்சிருப்பியள் தானே..? ஆள் கெதியில மேல உள்ள வெள்ளைச்சட்டைக்கு ஆப்பு வைக்கப்போகுது எண்டதை நான் சொல்லியே தெரியவேணும்..?

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் எண்டுறதுதான் வழமை. இங்க என்னடாவெண்டால் ஊர் இரண்டுபட்டால் குத்தியருக்குக் கொண்டாட்டம் எண்டு ஊரே கதைக்குது. முழுக்குடும்பமும் இப்ப ஊருக்குள்ள கதிரையைப் பிடிச்சிட்டினம். இப்ப அந்த ஊரின்ர நகரபிதாவின்ர கதிரைதானாம் அடுத்த குறி. இப்பவே, தொல்லை அமோகமாக் கிடக்கு. இன்னும் கொஞ்ச நாளில அந்த ஊரில உள்ள சொந்தநாட்டுக்காரனையே உந்தக் குடும்பம் வெளியேற்றினாலும் ஆச்சரியப்படுகிறதுக்கு இல்லைப்பாருங்கோ. ஏதோ நடக்குறதைக் காணுவம் எண்டு பெருமூச்சு விடுகுதுகள் ஊர்ச்சனம்.

படைத்தவன் மேல்பழியுமில்லை
பசித்தவன் மேல்பாவமில்லை
கிடைத்தவர்கள் பிரித்துக் கொண்டார்
உழைத்தவரகள் தெருவில் நின்றார்
அப்ப வரட்டே



GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45 058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch



www.generali.ch

076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

**வருமானக்காப்புறுதி**
**EINKOMMENS - VERSICHERUNGEN**
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

**சேமிப்புக்காப்புறுதி**
**SPARVERSICHERUNGEN**
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

**ஆயுட்காப்புறுதி**
**LEBENSVERSICHERUNGEN**
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

**வாகனக்காப்புறுதி**
**FAHRZEUGEVERSICHERUNGEN**
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

**வீட்டுக்காப்புறுதி**
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

**சட்டக்காப்புறுதி**
**RECHTSSCHUTZVERSICHERUNG**
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

**மருத்துவக்காப்புறுதி**
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்



**வீட்டுக்கடன்**
**HYPOTHEKEN**
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்


ATSAYAM
THE BIGGEST CHOICE ON THE WEB
www.atsayam.com
support@atsayam.com


YOBBANI LEBENSMITTEL & KIOSK
Öffnungszeiten:
Mo - Do: 09:00 - 22:00
Fr & Sa: 09:00 - 00:00
So & Feiertag: 12:00 - 19:00
அனைத்து விதமான
மளிகை பொருட்கள்,
உடன் மரக்கறி வகைகள்
மிக குறைந்த விலையில்
எம்மிடம் பெற்று கொள்ள
முடியும்.
எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
Grandweg 13, 59494 Soest
eMail: yobbani2017@gmail.com
Tel.: 02921 9445412 | Mobile: 0176 41648852

# ரொபர்ட் முகாபே — கதாநாயகன் வில்லன் ஆகிய கதை




வில்லன்களாக இருந்தவர்கள் கதாநாயகர்களாக மாறுவதும், கதாநாயகர்களாகத் திகழ்ந்தவர்கள் ஒரு காலகட்டத்தில் வில்லன்களாக மாறுவதும் திரைப்படங்களில் சகஜமாக நடக்கின்ற ஒரு விடயம். அரசியலிலும் அது சகஜம் என்பதற்கு பல உதாரணங்களைப் பார்த்திருக்கிறோம். கதாநாயகர்களாகச் சித்தரிக்கப் பட்டவர்கள் வில்லன்களாக மாறுதல் இயல்பானது. அதேநேரம், உண்மையான கதாநாயகர்கள் வில்லன்களாகச் சித்தரிக்கப்படுவதும் உண்டு. அரசியல், பொருளாதாரக் காரணங்களுக்காக வல்லாதிக்க சக்திகளால் அவ்வாறான சித்தரிப்புகள் நிகழ்த்தப் படுகின்றன. இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

சோவியத் ஒன்றியத்தின் உடைவின் பின்னான சூழலில், உலகம் ஒற்றைமைய உலகமாக மாற்றப்படுவதற்கான முயற்சிகள் சூடு பிடித்துள்ள நிலையில் இத்தகைய சித்தரிப்புக்கள் அதிகரித்து உள்ளன. 'வரலாற்றைத் திருப்பிப் பார்த்தல்', 'மீள்வாசிப்புச் செய்தல்' போன்ற சொல்லாடல்களின் ஊடாக மேற்குலகின் விருப்பானது பன்னாட்டு ஊடகங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக வெகுமக்கள் மனதில் திணிக்கப்பட்டு வருகின்றது. "ஒட்டுமொத்த இஸ்லாமியர்களும் கொடூரமான பயங்கரவாதிகள் அதனால் கொன்றொழிக்கப்பட வேண்டியவர்கள், வட கொரியா உலக வரைபடத்திலேயே இருந்து துடைத்தழிக்கப் படவேண்டிய நாடு, உலகை இரட்சிக்க உழைக்கும் நாடு அமெரிக்கா" என இன்னோரன்ன பல கற்பிதங்களை உலகின் பெரும்பாலான மக்கள் இன்று நம்பும் நிலையிலேயே உள்ளமை மேற்குலகின் சித்தரிப்புக்களுக்குக் கிடைத்த தற்காலிக வெற்றிகள் என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

இத்தகைய சிந்தனையிலே ஊறிய மக்கள், கியூபாவின் புரட்சித் தலைவர் பிடல் காஸ்ட்ரோவைக் கொலை செய்ய அமெரிக்க உளவுத்துறை அறுநூறுக்கு மேற்பட்ட தடைவைகள் முயன்றது என்ற தகவல் பற்றி எதுவும் வாய்திறந்து பேசுவதில்லை. உலகிலேயே அதிக எண்ணெய் வளத்தைக் கொண்ட வெனிசுவேலா அரசாங்கத்தைத் தனது காலடியில் விழ வைப்பதற்காக அமெரிக்கா மேற்கொண்டுவரும் சீர்குலைவு நடவடிக்கைகள் பற்றி வாயைத் திறப்பதில்லை. இது போன்று பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

கிட்டத்தட்ட இதுபோன்ற பின்னணியில்தான் சிம்பாப்வே நிகழ்வுகளை நாம் பார்க்க வேண்டும். இன்று பன்னாட்டு அளவில் பேசுபொருளாக மாறியுள்ள ரொபர்ட் முகாபே அவர்களின் பதவி துறப்பும், அதன் பின்னணியும் பற்றி ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

தென் ரொடீசியா என அறியப்பட்ட தற்போதைய சிம்பாப்வே 1980 ஏப்ரல் 14 ஆம் சுதந்திர நாடாகியது. விடுதலைக்கு முன்னான அரசாங்கம் இயன் சிமித் தலைமையில் காலனித்துவ பிரித்தானிய சார்பானதாக இருந்தது. மொத்த மக்கட் தொகையில் 0.2 வீதமான வெள்ளையர்களே அந்த நாட்டில் வாழ்ந்த போதும் ஆட்சி அவர்களின் பிடியிலேயே இருந்தது. சிம்பாப்வே நாடே ஆபிரிக்காவில் வெள்ளை நிறவெறியில்

இருந்து விடுதலை பெற்ற முதலாவது நாடானது. தென்னாபிரிக்கா வெள்ளை நிறவெறி ஆட்சியிலேயே அப்போதும் தொடர்ந்தது.

'சிப்பாப்வே ஆபிரிக்க தேசிய ஒன்றியம் தேசபக்த முன்னணி' என்ற கட்சியின் சார்பில் ரொபர்ட் முகாபே பிரதம அமைச்சராகப் பதவியேற்ற போதில் நாடு வறுமை, கல்வி அறிவின்மை எனபவற்றின் பிடியில் இருந்தது. செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமான இடைவெளி மிகப் பாரியதாக இருந்தது. இத்தகைய நிலையுடன் கூடிய நாட்டை மாத்திரமன்றி, கறுப்பின மக்களின் போராட்டத்தைக் கொடூரமாக அடக்கும் நோக்குடன் நிறவெறி அரசாங்கம் ஐ.நா. சபையின் முடிவையும் புறம்தள்ளிப் பெற்ற 700 மில்லியன் டொலர் கடனையும் சேர்த்தே முகாபேயின் கையில் தந்துவிட்டுச் சென்றது.

இந்தக் கடனோடு சேர்த்து, அயல் நாடான வெள்ளை நிறவெறி தென்னாபிரிக்காவின் சீர்குலைவு நடவடிக்கைகளுக்கும் தொடர்ச்சியாக முகங் கொடுக்க வேண்டிய நிலையில் முகாபே அரசாங்கம் இருந்தது. சுதந்திரத்துக்காகப் போராடிய அணிகள் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு ஆயுத மோதலாக மாறி ஒருபுறம் உள்நாட்டில் இரத்த ஆறு ஓடியது.

இத்தகைய சூழ்நிலையில் சகலருக்கும் கல்வி, மருத்துவம் குறிப்பாக சொந்த நிலம் என்ற கூழுரைகளோடு ஆட்சியை ஏற்ற முகாபே அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றின் தாளத்துக்கும் ஆடவேண்டிய நிலை ஏற்பட்டது. முகாபே அரசாங்கம் தொடர்பான விமர்சனங்களை தொடர்ச்சியாக முன்வைத்தாலும் தமது வணிக நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதில் மேற்குலகம் பின்னிற்கவில்லை. 1989 முதல் 97 வரையான காலப்பகுதியில் பிரித்தானியா ஹோக் ரக யுத்த விமானங்களை ஏற்றுமதி செய்ததுடன் காவல்துறை பயன்படுத்தும் 1000 லான்ட் ரோவர் ரக வாகனங்களையும் விற்பனை செய்தது. பதிலுக்கு தனது நாட்டுப் பொருட்களையே கொள்வனவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்தது.

ஒரு இளம் நாடு, வறுமையிலும், பொருளாதார அசமத்துவத்திலும், சீர்குலைவு நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டு யுத்தம் என்பவற்றிலும் சிக்கிக் கொண்ட நாடு தாளாத கடன்சுமையோடு முன்னேற்றத்தைக் காணுவது எங்ஙனம்? காலனித்துவ எதிர்ப்பு, நிறவெறி எதிர்ப்புக் கொள்கைகளோடு ஆபிரிக்காவில் கொழுந்து விட்டெரிந்த சுதந்திர வேட்கையை ஆதரிக்கும் கொள்கையையும் கடைப்படித்து வந்ததால் முகாபே அரசாங்கம் எத்துணை கஸ்டங்களை அனுபவித்து இருக்கும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளலாம்.



இன்றைய நிலையில் ஆபிரிக்காவிலேயே அதி கூடிய கல்வியறிவு மட்டமாக 89 வீத கல்வியறிவைக் கொண்ட நாடாக சிம்பாப்வே விளங்குவது முகாபே அவர்களின் சாதனைகளில் ஒன்று. அதேநேரம் 10 பில்லியன் டொலர் கடனைக் கொண்ட நாடாகவும் சிம்பாப்வே விளங்குகின்றது. முன்னைய அரசாங்கத்தின் கடனை மீளத் திருப்பிச் செலுத்த முடியாது என நாடு விடுதலை பெற்ற போழுதில் முகாபே கூறியிருக்க முடியும். அவர் அவ்வாறு சொல்ல விரும்பவில்லை. புரட்சி மீதும், தனது நாட்டு மக்கள் மீதும் அவர் அத்துணை நம்பிக்கை கொண்டிருந்தார்.

எனினும், மாறிவரும் உலகச் சூழலை அவர் கவனிக்கத் தவறி விட்டார் எனவே நினைக்கத் தோன்றுகிறது. சோவியத் ஒன்றியத்தின் உடைவு அவரது கொள்கைகளையும் இலட்சியங்களையும் பாதித்திருந்தன என நிச்சயமாகக் கூற முடியும்.

தற்போதைய நிலையில் தனது துணை அரசுத் தலைவராகப் பதவி வகித்த எம்முர்ஸன் ம்னங்காக்வா அவர்களைப் புறந்தள்ளிவிட்டு தனது இரண்டாவது மனைவியை தனது வாரிசாக ஆக்குவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சியே தனது 93 ஆவது வயதில் பதவியைத் துறக்க வேண்டிய நிலைக்கு முகாபேயை இட்டுச் சென்றுள்ளது. 37 வருடங்காளக ஆட்சியில் நீடித்த முகாபே இல்லாத சிம்பாப்வேயின் எதிர்காலம் என்னவாகும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அயல்நாடான மொசாம்பிக்கில் தலைமறைவாக இருந்துவிட்டு 1980 யனவரியில் நாடு திரும்பிய முகாபே அவர்களை வரவேற்க விமான நிலையத்தில் கூடியிருந்த மக்களின் எண்ணிக்கை அன்றைய காலகட்டத்தில் ஆபிரிக்காவில் கூடிய பொதுமக்களின் அதிகூடிய எண்ணிக்கையாகக் கணிக்கப்பட்டது. இன்று, முகாபே பதவி விலகினார் என அறிவிப்பு வெளியான போதில் மக்கள் வீதிகளில் ஆடிப் பாடுவதைக் காண முடிகின்றது. இது குறித்து நிற்பது என்ன? இத்தகைய எதிரெதிர் நிலைப்பாட்டைக் கொண்டு ஒருவரின் வரலாற்று வகிபாகத்தைக் கணித்துவிட முடியுமா?

'பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழுவல, கால வகையினானே' என்பதை மாத்திரமே இப்போதைக்குச் சொல்லி வைக்க முடியும். முகாபே பதவியில் இல்லாது போனாலும் அவர் கடைப்படித்த கொள்கைகளை தொடரும் ஆடசியாளர்களால் முழுவதுமாக மாற்றியமைத்துவிட்டுப் பயணிக்க முடியாது. முகாபேயின் பணிக்குக் கிடைத்த வெற்றியாகவே அதனைக் கணிக்க முடியும்.




Dortmund மாநகரில்

# தமிழர் அரங்கம் கல்விக்கூடம்




## யேர்மன் மொழி வகுப்புக்கள்

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



## Nachhilfe வகுப்புக்கள்

பாடசாலை மாணவர்களுக்கானது




## தமிழ் மொழி வகுப்புக்கள்

தமிழ் மொழி வகுப்புக்களுக்கு கட்டணம் இல்லை



## பரத நாட்டிய வகுப்புக்கள்

டோட்முண்ட் மற்றும் ஒபகவுசனில் நடைபெறுகின்றன



100 பேர் வரை அமரக் கூடிய மண்டப வசதி

உங்கள் இல்ல விழாக்கள், கலை விழாக்கள் அனைத்திற்கும் எமது மண்டபத்தை பயன்படுத்த முடியும்

**Rheinische Str 76 – 80 , 44137 Dortmund**
**Tel.: 0231 950 979 00 & 0151 633 633 33**

கம் மாநகரில்..

# ANANTH'S STORE

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

**Telefon: 02381 4977491 - Telefax: 02381 4977492**

அனைத்து விதமான மளிகை பொருட்கள்,
கடலுணவுப் பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள், மிக குறைந்த
விலையில் எம்மிடம் பெற்று கொள்ள முடியும்.








**Öffnungszeiten:**
**Mo.- Sa.: 09:00Uhr - 21:00Uhr**

**Heinrich-Reinköster-Strasse 10**
**59065 Hamm, Germany**

கம் பிரதான புகையிர நிலையத்திற்கு அருகாமையில் (நடைதூரம்)
வாகனம் தரிப்பிடம் வசதிகள் உண்டு!




# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

தேவன்

தமிழ்த் திரையுலகம் என்பது தமிழ் மக்களின் வாழ்வில் இன்றியமையாத அங்கமாக மாறிவிட்டது என்றே சொல்லலாம். அந்நாட்களின் எம்.ஜி.ஆர், சிவாஜி என்று ஆரம்பித்து தலைமுறை நடிகர்கள்வரை தமிழ்த்திரையுலகம் பிறமொழி பேசும் நடிகர்களின் வாழ்விடமாக இருந்திருக்கிறது. அதை வைத்து தமிழ் நாட்டு அரசியலை நிர்ணயிக்கும் இடத்தையும் திரையுலக நடிகர்கள் பெற்றுக்கொண்டார்கள். கடைசி மேசை நடிகரான கார்த்திக் வரைக்கும் கட்சி ஆரம்பிக்காத நடிகர்களே இல்லை என்றால், அரசியலில் திரையுலக ஆதிக்கத்தை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

காலம் செல்லச் செல்ல இன்றைய தமிழ்த் தலைமுறை நடிகர்களான கமல், விஜய், விக்ரம், ஆகியோர் கூட அரசியல் ஆட்டத்தை ஆரம்பிப்பார்களோ என அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்க, தமிழ்த் திரையுலகம் கொஞ்சம் கொஞ்சமாக தனது தனித்தன்மையை இழக்க ஆரம்பித்திருக்கிறது. பிறமொழித் திரைப்படங்களின் ஆதிக்கம், பிறமொழித் தயாரிப்பாளர்களின் படையெடுப்பு, பிறமொழி முதலீட்டாளர்கள் என தமிழ்த் திரையுலகம் எமது கண்முன்னே தொலைக்கப்படுகிறது என்ற உண்மை அப்படியே வெளித்தெரிகிறது.

இந்தியாவிலிருந்து வரும் பிறமொழித் திரைப்படங்களை விட்டுவிடுவோம். உலக அளவில் நோக்கினால் அமெரிக்க மற்றும் சீனத் திரைப்படங்களின் ஆதிக்கம் இந்தியாவில் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்திருக்கிறது.
குறிப்பாக அவை தமிழில் மொழிமாற்றப்பட்டு வெளிவந்தாலும், அமெரிக்கர்களுக்கும் சீனர்களுக்கு இந்திய மக்களின் சந்தை அதிகமாகத் தேவைப்படுகிறது. 1990 ஆம் ஆண்டின் பின்னர் மேலெழுந்த இந்த வெளிப்படையான அதிகரிப்பானது, இருபது வருடங்களுக்குள் தமிழ்த் திரையுலகத்தை அப்படியே விழுங்கும் நிலைக்கு வந்திருக்கிறது. அதேவேளை முன்னணி நடிகர்களை அரசியலினுள் தள்ளி, திரையுலகத்தை வெறுமையாக்கி, புதுமுகங்களோடு வெளிவரும் திரைப்படங்களைத் தோல்வியடையச் செய்து, அதன்மூலம் தமிழ்த் திரையுலகம் தனது தனித்தன்மையை இழந்துவிடக்கூடும் என்ற அச்சம் இன்று பல சாதாரண நடிகர்கள் வட்டத்தினுள் வந்தேவிட்டது. அதற்கு தமிழ்மொழியில் உச்ச ஆதிக்கம் கொண்ட பிறமொழி நடிகர்கள், குறிப்பாக ரஜினி போன்றோர் முக்கிய காரணமாகவும் உள்ளனர். பிறமொழித் திரைப்படங்கள், மற்றும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் பாங்கினூடாக, தமது பணப் பரிமாற்றத்தினையும் அவர்கள் ஒருநாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மாற்றிக்கொள்கிறார்கள். தமக்கு வாழ்வு கொடுத்த தமிழ்த் திரையுலகின் வாழ்க்கை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.

அண்மையில் பேசப்படும் தமிழ்த்திரைப்படங்களின் முதலீட்டாளரான அன்புச்செழியன் பற்றிய கந்துவட்டிக்

கொடுமைகள் சற்றுத் திரிபுபடுத்தப்பட்டு வெளிவருகின்றனவோ என்ற ஐயம் கூட ஏற்படாமல் இல்லை. ஏனெனில் ஏராளமான நடிகர்கள் அன்புச்செழியனுக்கு ஆதரவாகப் பேசிவரும் நிலையியும், அவரின் நீண்டகாலத் தொழிற்பாடும் இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. வட இந்திய மார்வாடிகள் என அழைக்கப்படும் முதலீட்டாளர்கள் தமது பணத்தை ஆறு வீத வட்டிக்குத் திரைப்படத்துறையில் முதலிடும் நேரத்தில் அன்புச்செழியன் மூன்று வீதத்திற்கு தனது பணத்தை முதலிட்டுவருகிறார் என்ற பல நடிகர்களின் வாக்குமூலம் சற்று யோசிக்க வைக்கிறது என்பதே உண்மை. ஒரு தொழிற்போட்டி அடிப்படையில் அன்புச்செழியன் மீதான குற்றச்சாட்டை ஏன் எவரும் நோக்குவதில்லை என்பதும் சந்தேகமே.

இந்தப் பிரச்சனை எழ முன்னமேயே, நடிகர் சங்கத் தேர்தலில் நடிகர் விசால் போட்டியிடுவதற்கு முன்பாக, தமிழ்த் திரையுலகின் அடிப்படைக் கட்டுமானம் சரியில்லை என மக்களிடத்தில் குற்றம் சாட்டி, இறுதியில் சரத்குமார் விசால் கூட்டணிக்குள் மோதல் உருவாகி, விசால் தேர்தலில் வெற்றி பெற, நடிகர் சங்கம் அப்படியே பிறமொழி நடிகரின் கைக்கு மாறியது. ஆனால், எங்காவது வேற்று மாநிலத்தில் ஒரு தமிழர் நடிகர் சங்கத் தேர்தலில் போட்டியிட்டு தலைமைப்பதவியைப் பெற்றுவிட முடியுமா என்ற சீமானின் கேள்விக்கு இங்கே யாரிடமும் பதில் இல்லை.

தமிழ்த் திரையுலகின் தற்போதைய புகழ்வாய்ந்த சண்டைப்பயிற்சி ஆசிரியரான பீட்டர் கெய்ன் சீனத் தற்காப்புக்கலை வித்தகராவார். ஆரம்பத்தில் ஒரு சில திரைப்படங்களில் அறிமுகமாகிப் பணியாற்றியவர் இப்போது தமிழ்த் திரையுலகின் ஏராளமான திரைப்படங்களைக் கையில் வைத்திருக்கிறார். இங்கே தமிழ்த் தற்காப்புக் கலை இயக்குநர்களின் நிலை என்னவென்ற கேள்விக்கு யாரும் பதிலளிக்க மாட்டார்கள். அதேபோல துணைச் சண்டை நடிகர்கள் கூட ஏராளமான சீன நடிகர்கள் பங்கேற்கும் நிலையைத் தெளிவாகக் காணமுடிகிறது.

தமிழ்த் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் பாரிய தயாரிப்பாளர்களில் ஒருவரான கலைப்புலி தாணு வைத் தமிழ்த் திரையுலகிலிருந்து வெளியேற்றும் முயற்சி விசாலினூடாக நடைபெறுகிறது என அண்மையில் பேட்டி ஒன்றில் அவரே தெளிவாகத் தெரிவித்திருந்தார். தயாரிப்பாளர் சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட இழுபறிகளுக்குப் பின்பு, தனித்து நின்று இயங்கப்போவதாகத் தெரிவித்திருக்கும் அவர், தனது தயாரிப்பில் வெளிவந்த ஐ



மற்றும் தெறி திரைப்படங்களின் வெளியீட்டில் ஏற்பட்ட தடங்கல்கள், ஐ திரைப்படத்தின் முன்னோட்டம் திருடப்பட்டு வெளிவந்தமை போன்ற செயற்பாடுகளால் தான் ஏராளமான பிரச்சனைகளைச் சந்தித்ததாகவும், இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்திருந்தார்.

விசால் நடித்துத் தோல்வியைத் தழுவிக்கொண்ட ஏராளமான திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள் தமிழர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அனைவரும் இன்னமும் பணமுடையில் சிக்கித் தவிக்கும்வேளையில் விசால் தொடர்ந்து திரைப்படங்களில் நடித்துக்கொண்டே இருப்பதன் மர்மம் என்ன என்பதும் அவர்களது மிகச்சரியான கேள்வியாகவே இருக்கிறது.

விடைபெறப்போகும் 2017 ஆம் ஆண்டில் மட்டும், ஏறக்குறைய 110 திரைப்படங்கள் வெளியிடப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றில் பலவற்றிற்குத் திரையரங்கு கிடைக்கவில்லை. அத்தனையும் தமிழ்த் திரைப்படங்கள் என்பதுவே பெரும் நெருடலாக இருக்கிறது. ஆனால் பாகுபலி வெற்றியில் நம்மவர்கள் திளைத்துக்கொண்டிருக்கிறார்கள். வெளிவந்த அநேக தமிழ்த் திரைப்படங்கள் தோல்வியிலேயே மாட்டிகொண்டன. அவற்றில் ஒரு சில திரைப்படங்களே முதலீட்டைத் திரும்பப் பெறும் அளவிற்கு வெற்றிபெற்றன. இந்த நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் தமிழ்த் திரையுலகம் என்னவாகும் என்பதனை நீங்களே ஊகித்துக்கொள்ளலாம்.

தமிழ்த்திரையுலகில் இசையமைப்பாளர்கள் மட்டுமே இன்னமும் தமிழர்களாக இருக்கிறார்கள். அவர்களும் ஓரங்கட்டப்பட்டு, ஒரு வேற்றுநாட்டு இசையமைப்பாளர் இனிவரும் நாட்களில் இசையமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.




ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச்சலுகை!

**Direct Booking Nr.**
**0176 21 68 21 49**

எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

CENTURY
TRAVELS



**Transport Service**
nach Frankfurt



**CENTURY TRAVELS GmbH**

nach Colombo
**ab 499€**



GUARANTEED BEST PRICE

**Ram Nishanthan**
Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal
0176 21 68 21 49

**Web: www.centurytravels.de | eMail: info@centurytravels.de**

**Hauptsitz:**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225

**Niederlassung:**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
or 0231 58 96 557
Fax: 0231 58 44 665

**Sri Lanka:**
No - 82,
New Chetty Street
Colombo 13
Tel.: 011 2 322 838

# சகல நாடுகளுக்குமான விமான பிரயாணச் சீட்டுகள், சுற்றுலா ஒழுங்குகளை மலிவாகவும் நேர்த்தியாகவும் செய்து கொள்ள




- இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு விசேட விலையில் விமானப்பயணச்சீட்டுக்களையும் சுற்றுலா ஏற்பாடுகளையும் செய்து தருகிறோம்
- முன்னணி நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை பேணி நாளாந்த விலைச் சலுகைகளை பெற்று உங்கள் பயணத்தை உங்கள் விருப்பப்படியே அனைத்து வசதிகளுடனும் அமைத்து தருகிறோம்
- இலவச ஆலோசனை, தன்னிகரற்ற வாடிக்கையாளர் சேவை

**நம்பிக்கை | தரம் | மலிவு | சிறந்த மக்கள் சேவை**

## KRISH TOURS & TRAVELS AG, ZURICH

சுவிஸ் மற்றும் சர்வதேச தர நிர்ணய நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றது

REISEGARANTIE | SRV FSV Schweizer Reise-Verband Fédération Suisse du Voyage Federazione Svizzera di Viaggi | Schweiz Tourismus. Mitglied | IATA Accredited Agent

KRISH TOURS & TRAVELS AG
Waisenhausstrasse 5, 8001 Zürich

Phone: 044 808 98 00
Email : info@ktsswiss.ch

Monday - Friday: 09:00h - 19:00h
Saturday: 09:00h - 16:00h

**Call: 044 808 98 00 | www.ktsswiss.ch**

*Preise inkl. Taxen und Zuschläge in der günstigten Buchnungsklasse

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட
இணைப்புச் சந்தா

€69

SET TOP BOX
INCLUDED

புதுப்பித்தல்

€49
14 மாதங்கள்



LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா
€4.99
மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · தமிழ்

1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்



FRANCE
036 967 2151

GERMANY
069 1200 7102

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THERE-OF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv